Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–21 | 05–08–2004 | வியாழக்கிழமை | ஓசை –169



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். (சி-9956) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# ஐ.ம.சு. முன்னணித் தலைமைப் பதவியிலிருந்து சனாதிபதி சந்திரிகா திடீர் இராஜினாமா!

## வேலைப்பளுவே காரணமென்ற கூற்றை இராஜதந்திரவட்டாரங்கள் மறுப்பு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியில் இருந்து சனாதிபதி சந்திரிகா திடீரென இராஜினாமாச்செய்துள்ளார். பதவிவிலகலுக்கு வேலைப்பளுவே காரணம் என்ற அவரின் கூற்றை இராஜதந்திர வட்டாரங்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இப்பதவி விலகலுக்கு வேறுகாரணங்கள் இருத்தல் வேண்டுமெனவும் பேசப்படுகின்றது.**

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் சனாதிபதி கூட்டமைப்பின் தலைமைப் பதவியிலிருந்து விலகியுள்ளார் என்று சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேலைப்பளு காரணமாகவே சனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இந்த பதவிக்கு தகுதியான ஒருவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சி விரைவில் நியமிக்கும் என்று சனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

வேலைப்பளு காரணமாக தனது தலைமைப் பதவியைவிட்டு விலகுவதாக சந்திரிகா வெளியே கூறினாலும், இதற்கு நிச்சயமாக உட்காரணங்கள் ஒருசில இருக்கலாம் என்று இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்தால் தற்போது வலுவிழந்துள்ள சுதந்திரக் கட்சியை மீண்டும் தனிக் கட்சியாக இயங்க வைப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனைத்துக் கூட்டங்களுக்கும் சமுகமளிக்க வேண்டியுள்ளமை ஜே.வி.பி.யினர் கிளப்பும் சிறிய பிரச்சினைகளுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டியுள்ளமை குறித்து சந்திரிகா குமாரதுங்க விசனம் கொண்டமை, இதனால் தனது நிறைவேற்று அதிகாரம் கூட பயனற்றுப்

(12ஆம் பக்கம் பார்க்க)


## கிரவல் ஏற்றிவந்த பாரவூர்தி துவிச்சக்கரவண்டியுடன் மோதியது

### – குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே பலி

(அலுவலக செய்தியாளர்)

துவிச்சக்கரவண்டிமீது கிரவல் ஏற்றிவந்த பாரவூர்தி மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் இரணைமடு முறிகண்டி ஏ-9 நெடுஞ்சாலையில் இடம் பெற்றுள்ளது. இரணைமடுச்



சந்தியிலிருந்து முறிகண்டிப்பக்கமாக சென்று கொண்டிருந்த துவிச்சக்கர வண்டியுடன் முறிகண்டிப்பகுதியில் இருந்து கிரவல் ஏற்றி வந்த பாரவூர்தி மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர் பாரவூர்தி சக்கரத்தினுள் நசியுண்டு உடல் சிதைந்த நிலையில் ஸ்தலத் (12ஆம் பக்கம் பார்க்க)

## சந்திப்புக்களை இடைநிறுத்த நோர்வே அரசாங்கம் முடிவு?

### – சிங்களப் பத்திரிகை தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகளையும், சிறிலங்கா அரசாங்கப் பிரதிநிதிகளையும் சந்திப்பதைத் தற்காலிகமாக இடைநிறுத்திக் கொள்ளப் போவதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்திருப்பதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வீச்சு

கிரான் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் நடைபெற்ற கிரனேட் வீச்சில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கிரான் கோவில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீதே இந்த கிரனேட் வீச்சு நடைபெற்றது. காயமடைந்தவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## மட்டு மாவடிவேம்புப்பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட மாவடிவேம்புப் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 8.30 மணியளவில் இடம்பெற்றதாக ஏறாவூர்ப் பொலிசார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் மாவடிவேம்பைச் சேர்ந்த கே.விமலேந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரின் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாதவர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் செங்கலடி வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

## புதுக்குடியிருப்பில் சிறப்புற நடைபெற்ற மாபெரும் எழுச்சித் தமிழ் விழா

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் மாபெரும் தமிழ் விழா தமிழ்த்தாய், தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் உருவப்படத்தை தாங்கிய ஊர்தி பவனியுடன் மிகவும் எழுச்சி பூர்வமான விழாவாக கொண்டாடப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக நேற்று மாலை 4.00 மணியளவில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக இருந்து மங்கலவாத்தியம் முழங்கி தமிழ்பாரம்பரிய மங்கலப் பொருட்களை ஆசிரியர்கள் தாங்கிவர தமிழ்த்தாயின் உருவப்படத்தை மாணவர்கள் ஏந்திவர

(12ஆம் பக்கம் பார்க்க)



## முல்லை. மாவட்ட பட்டதாரிகள் அரச செயலகம் முன்பு மறியல்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகளுக்கு, பட்டதாரி நியமனத்தில், திட்டமிட்ட முறையில் புறக்கணிப்பு மேற்கொண்டதைக்கண்டித்து, முல்லை. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினரால் நேற்று முல்லைத்தீவு அரச செயலகம் முன்பாக மறியலில் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.




படம் தவரட்ணம்

இதன் காரணமாகச் செயலக நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்ததுடன், ஊழியர்கள் வீடு திரும்பியதையும் அவதானிக்க முடிந்தது.

நேற்றுக் காலை 8.00 மணிக்கு முல்லைத்தீவு அரச செயலக நுழைவாயில் பகுதியில் ஒன்று சேர்ந்த முல்லை. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள், அரசசெயலக ஊழியர்களைச் செயலக வளாகத்திற்குள் செல்லவிடாது வாசல் கத

(12ஆம் பக்கம் பார்க்க)

## உசன் மக்களின் போராட்டம் திங்களன்று நடைபெறும்

உசன் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு சிறிலங்காப்படைகள் வெளியேற வேண்டும் எனக்கோரி இன்று சாவகச்சேரி பிரதேச செயலகம் முன் நடாத்த இருந்த மறியற்போராட்டம் வரும் 9ஆம் திகதி இற்குப் பிற்போடப்பட்டுள்ளது. எனப் போராட்டக் குழுவினர் அறிவித்துள் ளார்கள் இதுகுறித்து கருத்துத் தெரிவித்த போராட்டக் குழுவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் பாராளுமன்ற அமர்வுகள் கொழும்பில் இடம் பெற இருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கு இல்லாதவேளை இங்கு போராடடம் நடத்துவது சரியாக இருக்காது என்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விசேட செயலமர்வு

கேம்பிறிஜ் கல்லூரி உதயநகர், இல-01 2004 ஆகஸ்ட், 15ஆம் திகதி தரம் 05 புலமைப்பரிசிலுக்கு தோற்றஇருக்கும் மாணவர்களுக் கான விசேட செயலமர்வு 2004-08-07ஆம் திகதி சனி (காலை 9.00 மணிக்கு) நடைபெறும். இதில் சகலரும் கலந்து பயன்பெறவும். கட்டணம் 150/= நிர்வாகி. (4649)


# பச்சிலைப்பள்ளி உள்ளூராட்சி சபை உள்ளூராட்சி வார நிகழ்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் உள்ளூராட்சி வார இறுதி நாள் விழா வரும் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் காவல்துறைப் பணிமனைக்கு முன்பாக உள்ள பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. இந் நிகழ்விற்கு கிளி. அரசாங்க அதிபர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வடக்கு கிழக்கு மாகாணம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தமிழீழ நிர்வாக சேவைப்பொறுப்பாளர், கிளிநொச்சி அரசியல் துறைப் பொறுப்பாளர், பச்சிலைப்பள்ளி தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப பாளர் போன்றோர் இதில் கலந்து கொள்கின்றனர். இந் நிகழ்விற்கு பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை செயலாளர் இ.து. சிவராசா அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

## கால்நடைகள் களவுகுறித்து எச்சரிக்கை

மன்னார் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியிலிருந்து வருப வர்கள் எமது கட்டுப்பாட்டு பகுதி யில் இருக்கும் கால் நடைகளைக் களவாகக் கொண்டு சென்று இறைச்சித் தேவைக்கு விற்பனை செய்து வருவதால் எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் கால்நடை உரிமையாளர்கள் மிக வும் எச்சரிக்கையாக இருக்குமாறு மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தினர் கேட்டுக் கொள்கின் றனர்.

## கட்ராக்ற் கண் சிகிச்சை

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 16 தொடக்கம் 21ஆம் திகதிவரை வவுனியா பொது வைத்தியசாலை யில் கட்ராக்ற் கண்சிகிச்சை நடை பெறவுள்ளதால் இது வரை பதிவு செய்யாதவர்கள் 05.08.2004 இற்கு முன்பு பதிவுசெய்யுமாறு முல்லைத் தீவு மாவட்ட வைத்திய அதிகாரி திரு.ஜி.சி.தர்மேந்திரா அவர்கள் கேட்டுக்கொள்கிறார். (20)


சங்கீத கலாஜோதி திருமதி ஜெகதா பத்மகாந்தன் அவர்களின்

## சிறப்புத் தமிழிசை அரங்கு

காலம்:- 06.08.2004. வெள்ளிக்கிழமை
நேரம்:- மாலை 4.30மணி
இடம்:- கிளி. பண்பாட்டு மண்டபம்

பாட்டு

ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்து சென்று தற்போது தாயகத்திற்கு வருகை தந்திருக்கும்

சங்கீத கலாஜோதி

திருமதி ஜெகதா பத்மகாந்தன் அவர்கள்

அணிசெய் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| வயலின் | : இசைக்கலைமணி | : சு. கோபிதாஸ் |
| மிருதங்கம் | : இசைக்கலைமணி | : க. கண்ணதாசன் |
| கடம் | : கலாவித்தகர் | : சதா. வேல்மாறன் |
| கெஞ்சிரா | : கலாவித்தகர் | : இரா. சிவராமன் |
| முகர்சிங் | : கலாவித்தகர் | : ந. சதீஷ்குமார் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நுண்கலைக் கல்லூரியினர்

(சி-10058)


## யாழ்ப்பாணம்-மாநகராட்சிமன்றம்

*நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிகக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான*

### கேள்வி அறிவித்தல்-2004

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கச்சான் கடைகள், மணிக்காப்புக் கடைகள், ஐஸ் கிறீம் கடைகள்/வாகன நிலையங்கள் இனிப்புக் கடைகள், இதர கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பரமுகவர் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற் கான நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கள் எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான கேள்விப்படிவங்களை மீளளிக்க முடியாத படிவக்கட்டணம் ரூபா.300/=உம், மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ஐஸ்கிறீம் கடைகளுக்கு ரூபா.10000/=உம் ஏனைய கடைகளிற்கு ரூபா.1000/=உம் சபையில் செலுத்துவதன் பேரில் எதிர்வரும். 12.08.2004 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.00 மணிவரையும் மாநகராட்சி மன்றநானாவித இறைவரிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வியை அரக்கு முத்திரை யிடப்பட்ட கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதி பி.ப.12.30 மணிக்கு முன் அலுவலகத் தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர் மாநகராட்சிமன்றம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கேள்விச்சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் பிரசன்னமாக இருக்கலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்வதுடன் கடைகளுக்கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

குறிப்பு:- மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து, சபையின் அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக்காலத்தில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றோம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

கலாநிதி.க.குணராசா
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

(சி-10125)


தமிழர்புனர்வாழ்வுக்கழக முகாமைத்துவக்கல்லூரியில் வெகுவிரைவில் ஆரம்பமாகின்றது. AAT கற்கை நெறி

## எதிர்காலத்தை ஒளிமயமாக்க ஒரேவழி தொழில்வாய்ப்பைப் பெறத் தகுந்த பாடநெறி AAT கற்கை நெறி

இக்கற்கைநெறி கீழ்வரும் 4 பாடங்களைக் கொண்டுள்ளது.

1. அடிப்படைக்கணக்கியல்
2. வியாபாரக்கணிதமும் புள்ளிவிபரவியலும்
3. பொருளியலும் வர்த்தகமும்
4. கணக்காய்வு

வன்னிமண்ணில் முதல் தடவையாக உருவாகும் AAT கற்கை நெறியைக் கற்றுப் பயன்பெற அரிய வாய்ப்பு

★ மிகக்குறைந்த கட்டணம்
★ O/L,A/L தராதரத்துடன் கற்கும் வாய்ப்பு
★ தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் விரிவுரைகள்
★ வன்னிமண்ணிலேயே பரீட்சைகள்.

விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 01.10.2004

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி
AAT கற்றைநெறி,
முகாமைத்துவக்கல்லூரி,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
முதன்மைச் செயலகம்,
கிளிநொச்சி.

விண்ணப்பப் படிவங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும் த.பு.க.முதன்மைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
MR.SRISKUMAR,
T.P: 021-228-3947
Fax : 021-228-5955

(சி-10059)




# தீவிரவாதிகளின் தாக்குதல்களைத் தடுக்க பிரிட்டன் பொலிசார் தீவிர முயற்சி

## -சுற்றி வளைப்புத் தேடுதல்களில் பலர் கைது

(லண்டன்)

**பிரிட்டனில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாமென விடுக்கப்பட்ட எச்சரிக்கையையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்களில் சந்தேக நபர்கள் பலர் கைதாகி வருவதாக் அறிவிக்கப்பட்டுள்ளது.**

பிரிட்டனில் பல பகுதிகளில் பொலிசார் மேற்கொண்ட பயங்கர வாதத் தடுப்பு நடவடிக்கைகளில் 13 சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பயங்கர வாத நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.


அடுத்த சில வாரங்களில் பயங்கரவாதத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்படலாமென்ற வகையில் அமெரிக்கா விடுத்த எச்சரிக்கை யினைத் தொடர்ந்து இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையில் பிரிட் டன் பொலிசார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் 20 வயதுக்கும், 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். அதேவேளை, லண்டனில் வட மேற்குப்பகுதியிலும் தென் மேற் குப்பகுதியிலும் இந்தத் தேடுதல் கள் நடைபெற்றன. கைதான சிலர் பிரிட்டிஷ் பிரஜைகள் என்றும் மற்றும் பலர் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. 2001 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க நகரங்களில் இடம் பெற்ற தாக்குதலினைத் தொடர்ந்து பிரிட்டனில் மாத்திரம் 500 இற்கும் அதிகமானோர் பயங் கரவாதச் சந்தேக நபர்கள் என்ற பெயரில் கைதுசெய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## விமானவிபத்து

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் டெக்ராஸ் மாகாணத்தில் பங்களா வீடொன் றின் மீது சிறியரக விமானம் ஒன்று நேற்று முன்தினம் மோதிய தில், விமானத்தில் பயணம் செய்த ஆறு பேரும் பலியாகினர்.




பாக்தாத்தில் நடந்த குண்டுவெடிப்பில் சேதமடைந்த பொலிசாரின் வாகனத் தைச் சோதனையிடும் கண்காணிப்பாளர்களும், பொலிசாரும்.

# ஈராக் தீவிரவாதிகள் வசமிருந்த 6 பணயக்கைதிகள் விடுதலை

(அம்மான்)

ஈராக்கில் பணயக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட நான்கு ஜோர் தானியர்களையும், இரு துருக்கியர் களையும் ஈராக்கிய தீவிரவாதிகள் நேற்று விடுதலை செய்துள்ளனர்.

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகள் வெளியேற வலியுறுத்தி அந்நாட்டில் பணியாற்றும் வெளி நாட்டினரை சதாம் ஹுசைன் ஆதர வுத் தீவிரவாதிகள் பிணைக் கைதிக ளாக கடத்திச் செல்வது அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் ஈராக்கில் றக் சாரதிகளாகப் பணியாற்றும் நான்கு ஜோர்தானியர்களும், இரு துருக்கி யர்களும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

இதனையடுத்து நான்கு ஜோர் தானிய சாரதிகளையும் மீட்பதற்கு ஜோர்தான் அரசு தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

இதனையடுத்து ஜோர்தான் சாரதிகள் நான்கு பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நல்ல ஆரோக்கியமாக இருப்பதாக ஜோர்தான் அரசு கூறி யுள்ளது.

ஆனால் தீவிரவாதிகள் ஜோர் தானியர்களை விடுதலை செய்வ தற்கு என்ன நிபந்தனை விதித்தார் கள் என்றும் அதனை ஜோர்தான் நிறைவேற்றியதா... போன்ற விபரங் களை ஜோர்தான் அரசு வெளியிட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐந்து அல்-ஹைதா உறுப்பினர்கள் பாகிஸ்தான் படையினரால் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அல்-ஹைதா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் ஐந்து பேர் கைது செய் யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகள் கூறியுள் ளனர்.

அமெரிக்காவிலுள்ள சர்வதேச நிதியம், உலக வர்த்தக அமைப்பு அலுவலகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்போவதாக அல்-ஹைதா தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள் ளதையடுத்து, பாகிஸ்தான் உள் ளிட்ட பல்வேறு நாடுகளில் தீவிர வாதிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டையினை அமெரிக்கா தலை மையில் முடுக்கிவிடப்பட்டி ருக்கின்றது.

இதனடிப்படையில் பாகிஸ் தானில் தீவிரவாதிகளின் செயற் பாடுகளை உளவுப்படையினர் உன்னிப்பாக அவதானித்து வந்தனர் என்று செய்தித்துறை அமைச்சர் ஷேக்அகமத் அஜித் கூறியுள்ளார்.

இந்நிலையில் தான் அல்-ஹைதா தீவிரவாதிகள் ஐந்துபேரை உளவுப்படை கைது செய்துள்ளதா கவும் அவர் கூறியுள்ளார். பிடிபட்ட வர்களில் ஒருவர் நீண்ட நாட்க ளாகத் தேடப்பட்டு வரும் முக்கிய மான குற்றவாளி என்று பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.



காஸாப்பகுதியில் இஸ்ரேல் இராணுவத்துடன் மோதலில் ஈடுபடும் இஸ்லாமிய ஜினாத் குழுவினர்.

# கொலம்பிய தீவிரவாதிகள் தாக்குதல் 9 பொலிசார் பலி; மூவர் காயம்

கொலம்பியாவில் நேற்று முன் தினம் பொலிசார் ரோந்துப் பணி யில் ஈடுபட்ட வேளை தீவிர வாதி கள் வெடி குண்டு வீசித் தாக்கியதில ஒன்பது பொலிசார் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

கொலம்பியாவில் செயற்பட்டு வரும் தீவிரவாதப் படையினர் போதைப் பொருட்களைக் கடத்தி வருகின்றனர். சென்ற மாதம் மூன்று தொன் எடையுள்ள போதைப் பொருளை தீவிரவாதிகள் கடத்த முயன்ற போது பொலிசார் பறி முதல் செய்து விட்டனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே தீவிரவாதிகள் பொலி சாரை தாக்கி வருவதாக கூறப்ப டுகின்றது. கொலம்பியாவின் தலை நகர் பொகோட்டாவில் பொலிசார் ரோந்துப் பணியில் நேற்று முன் தினம் ஈடுபட்டிருந்த போது அவர் கள் சென்ற வாகனத்தின் மீது தீவிர வாதிகள் வெடி குண்டை வீசி தாக் குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல் பற்றி கருத்துக் கூறியுள்ள பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கடந்த இரண்டு மாதத்தினுள் நடத்தப்பட்ட இரண்டாவது பெரிய தாக்குதலாகும் என்று கூறியுள்ளார்.



ஈராக் பகுபா நகரில் இடம் பெற்ற கார்க்குண்டுவெடிப்பில் பலியானவர்க ளின் உடல்கள் வைக்கப்பட்டிருக்கும் சவச்சாலையருகே கண்ணீருடன் காணப்படும் உறவினர்கள்.

# புதன் கிரகத்தை ஆய்வுக்குட்படுத்த 'மொசஞ்சர்' விண்கலம் பயணம்

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆராட்சி நிறுவனமான நாசா மொசஞ்சர் என்ற விண்கலத்தினை விண் ணுக்கு அனுப்பியுள்ளது. சூரிய னுக்கும் பூமிக்கும் மிக அருகி லுள்ள புதன் கிரகத்தினை ஆய்வு செய்வதற்கே இவ் விண்கலத்தை நாசா அனுப்பியுள்ளது.

மிகவும் வெப்பமுள்ள கிரகமான புதனின் இரு துருவங்களிலும் சூரிய ஒளி படாதமையின் காரண மாக அங்கு கடும் குளிர் நிலவும் என்றும் இதனால் அப்பகுதிகளில் பனிக்கட்டிகள் உள்ளனவா என்றும் ஆய்வு செய்யும் நோக்கில் மொசஞ சர் விண்கலம் வடிவமைக்கப்பட் டுள்ளதுடன் புதன் கிரகத்தினுள் நுழையும் முன் 15 முறை இந்த விண்கலம் சூரியனையும் சுற்றி வர வேண்டியிருப்பதால் சூரிய வெப் பத்தை தாங்கும் விதத்திலும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. இந்த விண்கலம் புவியிலிருந்து 9 கோடியே 10 இலட்சம் மைல் தொலைவில் உள்ள புதன் கிரகத்தினை 2011 ஆம் ஆண்டு சென்றடையும் என் றும் அதன் பின்னர் புதன் கிரகம் பற்றிப் பல அரியதகவல்கள் வெளி யாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



தாய்லாந்தில் பட்டாணி மாகாணத்தில் தாய் - முஸ்லிம் தலைவர்களுக்கும் இராணுவ உயரதிகாரிகளுக்குமிடையில் நடைபெறும் இணக்கப் பேச்சுக்களின் போது நடந்த சந்திப்பு.



பகுபாவில் தற் கொலைத் தாக்குதலில் பலியான ஈராக்கிய தேசியப் படையினரின் மறைவால் துயருற் றிருக்கும் உற வினர்கள்.

# வவு. வளாகம் மூடப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்விபாதிப்பு

## -இறுதியாண்டு மாணவர்கள் கவலை

(செட்டிகுளம்)

**மூடப்பட்டுள்ள யாழ்.பல்கலைகழகத்தின் வவுனியா வளாகத்தினைத் திறப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை என்று வவுனியா வளாகத்தின் இறுதியாண்டு மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இன்னும்இரு வாரங்களே தமது அறுதியாண்டு பரீட்சைக்கு இருக்கின்றதன் காரணமாக தமது கல்வி செயற்பாடுகள் மிகவும் மோசமாக பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் அம் மாணவர்கள் தெரிவிக்கின்றனர். வளாகத்தில் இருக்கின்ற பிரச்சினைகள் இனம் காணப்பட்டு தீர்வு காணப்பட்டால் தான் தமது படிப்பினை உரிய முறையில் சீரியமாக கொண்டு செல்ல முடியும் என்று தெரிவிக்கின்றனர். இதுசம்பந்தமாக வவுனியா வளாகமோ அல்லது யாழ். பல்கலைக்கழகமோ நடவடிக்கை எடுப்பது போன்று தெரியவில்லை. தொடர்ச்சியாக மாணவர்கள் வெளியேற்றப்பட்ட நிலையிலும் நிருவாக உத்தியோகத்தர்கள் பணிக்கு திரும்பாத நிலையிலும் வவுனியா வளாகத்தின் செயற்பாடுகள் முடக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. இதே வேளை தமிழ் மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மாணவர்களை நாளைகாலை வவுனியா தமிழ் மாணவர் ஒன்றிய காரியாலயத்தில் சந்திக்க இருப்பதாக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். இந்த சந்திப்பில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவிருப்பதால் மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (21)

# ஓமந்தை சோதனைச்சாவடியில் படையினரால் இளம்பெண் கைது!

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் கடந்த ஞாயிறு பிற்பகல் இளம் பெண் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிள்ளையாரடி வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு கீதா (வயது30) எனும் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இவர் போலி அடையாள அட்டை வைத்திருந்ததன் காரணத்தால் கைது செய்யப்பட்டதாகப்படையினர் தெரிவித்தனர். நேற்று முன்தினம் வவுனியாப் பொலிசாரிடம் இப்பெண்ணை ஒப்படைத்ததாகத் தெரிவிக் கப்படுகிறது.

# கால்வாய் நோய் பரவுவதைத் தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுக!

## த.பொ.மே. நிறுவனம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய் பரவுவதைத் தடுக்க தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்பாளர்கள் இலவசமாகப் போடப்படும் தடுப்பூசிகளை அருகில் உள்ள கால் நடை வைத்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு தவறாது தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசிகளைப் போடுவதன் மூலம் நோய் பரவுவதைத் தடுக்க ஒத்துழைக்குமாறு தமிழீழ பொருண்மிய நிறுவனத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்படுகின்றது. (08)

# கள்ள நோட்டுக்கள் குறித்து வவுனியாவில் எச்சரிக்கை

(செட்டிகுளம்)

வவுனியாவில் அதிகளவில் கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருப்பதாகவும் எனவே மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு வங்கியாளர்கள் கேட்டுள்ளனர். வவுனியா நகர் மற்றும் புற நகர் பகுதியில் இவ்வாறு அதிகளவான கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் உள்ளன. 1000ரூபா 100ரூபா போன்ற நோட்டுக்கள் அதிகளவில் தற்போது கள்ளநோட்டுக்களாக இருப்பதாகவும் இது தொடர்பாக வவுனியா பொலிசாருக்கும் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சாதாரணமாக பார்த்தால் எந்த விதமான மாறுதல்களும் தெரியாத இந்த நோட்டுக்கள் தண்ணீர் படுகின்றபோது நிறம் மாறுவதாகவும் அத்துடன் பணத்தில் இருக்கின்ற சிங்கம் தெரியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான அதிகளவு பணம் வங்கிகளுக்கு மாற்றவருவதாகவும் அவ்வாறு வரும் பண நோட்டுக்களை ஓட்டை போட்டுத் திருப்பி அனுப்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றுக்கு மட்டும் மிக குறுகிய நாட்களில் 15,000 ரூபா கள்ள நோட்டுக்கள் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே வவுனியா வாழ் மக்களும் வெளியிடங்களில் இருந்து வருபவர்களும் இதில் அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# குன்றும் குழியுமாகக் கிடக்கும் வடமராட்சி கிழக்கு கரையோர வீதி

(அலுவலகசெய்தியாளர்)

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதி வீதிகள் திருத்தப்படாமல் உள்ளதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

வடமராட்சி கிழக்கில் பல வீதிகள் கற்குவியல்களாகவும் மண் வீதிகளாகவும் காணப்படுகின்றன.

அவற்றைப் புனரமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையால் வீதிகள் பெரும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

வாகனங்கள் பயணிக்கும் போது குன்றுகளாகவும், குழிகளாகவும் வீதி இருபபதால் ஆபத்தான நிலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றார்கள். இரவு நேரங்களில் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்த அரச அதிகாரிகள் எவரும் கவனமெடுக்காமல் இருப்பது அந்தப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தீ)

# வரும் ஐந்தாண்டில் வவுனியாவில் குடிநீருக்குத் தட்டுப்பாடுவரும்

(செட்டிகுளம்)

வவுனியாவில் இன்னும் ஐந்தாண்டு காலப்பகுதியில் குடிநீருக்குப் பாரியளவு தட்டுப்பாடு நிலவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்குத் தற்போதே சரியான முறையில் திட்டமிட்டு செயற்படுவது மிகமுக்கியமானதாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியாவினை பொறுத்தமட்டில் தற்போதைய சமாதான காலத்தில் அதிகளவான மக்கள் வாழ்ந்து வருகின்ற பிரதேசமாக இருக்கின்றது. அத்துடன் வவுனியாவில் திட்டமிடாது பல குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக காடுகள் அழிக்கப்பட்டுள்ளது. இது இவ்வாறு இருக்க சில அதிகாரிகளின் துணையுடனும் அதிகாரிகளும் திட்டமிட்டு குளங்களை அண்டிய பிரதேசத்தில் உள்ள காணிகளை அடாவடித்தனமாகப் பிடித்துள்ளனர். இதன் காரணத்தால் குளத்தின் கொள்ளளவு மிகவும் குறைந்துள்ளது. அதன் விளைவுகள் தற்போதே சிறிய அளவாக வெளிப்படுத்துவதாகவும் இன்னும் ஐந்து முதல் பத்தாண்டுகளுக்குள் குடிதண்ணீருக்குப் பாரியளவு தட்டுப்பாடு நிலவும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# பயிற்சி நிலையம் இல்லை முல்லை விவசாயிகள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் புனரமைக்கப்படாததினால் விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

1999ஆம் ஆண்டு நடைபெற்ற ஜெயசிக்குறு சமரின்போது ஒட்டுசுட்டான் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது. இதன்போது விவசாயப்பயிற்சிக்கல்லூரி அழிக்கப்பட்டது. இதனால் பழைய கால முறையிலேயே மக்கள் விவசாயத்தை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. நவீன முறையிலான விவசாயத்தை மேற்கொள்ளமுடியாத நிலையில் விவசாயிகள் கவலை தெரிவித் தனர்.

இவ்விடயமாக முல்லை மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளரிடம் கேட்டபோது இப்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான திட்டத்தினை நியாப் நிக்கொட்நிறுவனங்களிடம் கொடுக்கப்பட்டும் எவரும் அத்திட்டத்திற்கான நிதி தரவில்லை. ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் இதற்கான உதவி வழங்க முன்வரவில்லையென்று இவ்விடயமாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ச.கனகரத்தினத்திடம் கேட்டபோது தமது நிதியிலிருந்து சிறிய உதவிசெய்வதாக வாக்களித்துள்ளார். விவசாயிகள் இப்பயிற்சி நிலையம் இல்லாததினால் பாதிப்படைந்துள்ளனர் என்பது எமக்கு தெரிகின்றது என்று இவ்விடயமாக தாம் முயற்சி எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். (20)

### மோசடியாளர் குறித்து எச்சரிக்கை

(செட்டிகுளம்)

வெளிநாட்டுக்குப் பிள்ளைகளை அனுப்புவதாகக் கூறி சில நபர்கள் அதிக அளவான பணத்தினைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவாகி விடுவதாகவும், இது தொடர்பாக நாளாந்தம் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக வவுனியா விஷேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிசார் தெரிவிக்கின்றனர். புதுக்குடியிருப்புப் பகுதிக்கு வவுனியாவில் இருந்து சென்ற நபர் தான் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புவதாகக் கூறி அதிக அளவான பணம் பெற்றுள்ளார். விளக்கமில்லாது இரண்டு குடும்பங்கள் 3இலட்சத்து 59 ஆயிரம் ரூபாவினை கொடுத்துள்ளனர். இது தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும் அது சம்பந்தமான நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வவுனியா நீதவான் முன்னிலையில் தான் பணம் பெற்றமை தொடர்பாக ஒப்புக்கொண்டு தற்போது பணம் செலுத்துவதாகவும் கூறியுள்ளார். இவ்வாறு சில நபர்கள் இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதியிலும் கட்டுப்பாடற்ற பகுதியிலும் தொடர்ந்து இயங்கி வருவதாகவும் மக்கள் இது தொடர்பாக விழிப்பாக இருக்குமாறு விஷேட குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி எஸ்.பூலோகராஜா தெரிவித்துள்ளார். (21)

# புதிய நெல்லினம் அறிமுகம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட உதவி விவசாயத் திணைக்களத்தினால் இவ்வாண்டுக்கான புதிய நெல்லினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.நெல் இனத்தில் 3 1/2 மாதத்தில் பயன் தரக்கூடிய BW 361 சிவப்பு அரிசி, At 362 சிவப்பு அரிசி, BW 363 வெள்ளை அரிசி என்பனவும்

நிலக்கடலையில் இந்தி,டிக்கிரி என்பனவும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. .விவசாயிகள் குறைந்த மாதத்தில் கூடிய விளைச்சலைப் பெற்று பயனடைய வேண்டும் என்று முல்லைமாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு.இ.கோகுலதாசன் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் இவ் அறிமுகப்பயிர்களோடு எள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவதாகத் தெரிவித்தார். (20)

# வடகிழக்கு மாகாண தமிழ்மொழி எழுத்தாக்கப்போட்டி

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மொழி தின எழுத்தாக்கப் போட்டிகள் ஆகஸ்ட்06ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

வலய மட்டத்தில் நடைபெற்ற எழுத்தாக்கப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் தமது ஆள் அடையாள அட்டை அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் ஆகியவற்றுள் ஒன்றுடன் தேர்வு நிலையங்களுக்குச் சமுகமளிக்குமாறு தமிழ் மொழி உதவிக்கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்முனை, சம்மாந்துறை அக்கரைப்பற்று, கல்வி வலயங்களைச் சேர்ந்தவர்களுக்கான தேர்வு நிலையம் கல்முனை வெஸ்லி கல்லூரியிலும் பட்டிருப்பு, கற்குடா, மட்டக்களப்பு [illegible] லயங்களைச் சேர்ந்த மாண[illegible] நக்கான தேர்வு நிலையம் மட்ட[illegible] ாப்பு வின்சன்ட் (வயது30) மக[illegible] கல்லூரியிலும் அமையும்.

திருகோணமலை, மூதூர், கந்தளாய் வலய மாணவர்களுக்கான தேர்வு நிலையமாகத் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியிலும் வவுனியா வடக்கு வவுனியா தெற்கு மாணவர்களுக்கு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் மன்னார், மடு வலய மாணவர்களுக்கு மன்னார் அல்அசார் மகாவித்தியாலயமும் அமையும்.

முல்லைத்தீவு, துணுக்காய், வலய மாணவர்களுக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயமும் வலிகாமம், வடமராட்சி தீவகம் தென்மராட்சி, வலய மாணவர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியும் தேர்வு நிலையங்களாக அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளன. (25)

# முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப் போட்டி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப் போட்டி நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் கற்சிலை மடு அ.த.க பாடசாலை மைதானத்தில் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தலைமையில் இட்மபெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை கூழாமுறிப்பு கிராம சேவகர் பாலசுப்பிரமணியம் ஏற்றி வைக்க தேசியக் கொடியினை கற்சிலை மடு வலயப் பொறுப்பாளர் கதிர் ஏற்றினார்.மங்கல விளக்கினை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன், துணுக்காய் வலய முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கு.கிருபைரஞ்சினி ஆகியோர் ஏற்றினர். இது தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடாத்தப்பட்டது. இதில் 25 முன்பள்ளிகள் கலந்து கொண்டன. (05)

# தேசிய விடுதலைப் போராட்டத்தை தகர்ப்பதே இந்தியா உள்ளிட்ட சில சக்திகளின் நோக்கம்

-அரசியல்துறை விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம்

(வடமராட்சி)

**தற்போது கிழக்கில் காணப்படும் அசாத்தியமான சூழலை பெரிதுபடுத்தி தமிழ் மக்களிடமிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தை அந்நியப்படுத்தலாமென்பதே இந்திய புலனாய்வுத்துறை உள்ளிட்ட அனைத்துத்தரப்புக்களதும் நோக்கமாக இருக்கிறது. முதலில் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்துவது இரண்டாவது அதனூடாக தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தகர்ப்பது. இவையிரண்டும் சாத்தியமாகும் போது பலவீனமானதோர் நிலை இங்கு தோற்றம்பெறும். "அப்போது தனது நலன்சார்புடைய சக்திகளை பதவியிலமர்த்தி இந்தியா தமிழரைப் பாதுகாக்கின்றதென்ற தோற்றப்பாட்டை உருவாக்குவது அவர்களது நோக்கம்" எனத் தெரிவித்தார் விமர்சகர் கே.ரி.கணேசலிங்கம்.**

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளரான அவர் "சமகால அரசியல் தொடர்பான" உரையொன்றினை நேற்று முன்தினம் நெல்லியடியில் ஆற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சமாதான .முயற்சிக்கான தடைகளும் உலக நாடுகளின் கொள்கை வகுப்புக்களும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற இவ்வுரை கரவெட்டிப் பிரதேசசபை கேட்போா கூடத்தில் பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் இந்தியாவைப்போன்று அமெரிக்காவிற்கும் இலங்கை மண்ணில் அதிக இலாபங்களும் நலன்களும் காணப்படுகின்றதென்பதை அமெரிக்க இராணுவத் தளபதியே அண்மையில் கூறியிருந்தார். இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில் உள்ளதென்ற பழைய வாதத்தையே அவர்கள் மீண்டும் மீளவாக்கம் செய்துள்ளனர். ஆனால் கிழக்கில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சமமான நலன்கள் உண்டென்பது திருகோணமலை எண்ணெய்க் குதங்களை குத்தகைக்கு எடுப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம் இலங்கையுடன் அமெரிக்கா செய்த பாதுகாப்பு உடன்படிக்கையின் பிரகாரம் திருகோணமலை கடற் போக்குவரத்திற்கும், விமானப்போக்குவரத்திற்கும் முக்கிய பிரதேசமாக உள்ளது.

எனவே அமெரிக்காவைப் பொறுத்தவரை கிழக்கிலங்கையை வடக்கிலிருந்து பிரிப்பதும், அதனால் அமெரிக்க நலனுக்கு ஆபத்தேதுமில்லையெனவும் கணக்குப் போடுகிறது. எனினும் இலங்கையில் போர் நிகழ்வது அமெரிக்காவின் ஏனைய பிராந்தியங்கள் மீதான நடவடிக்கைகளுக்கு ஆபத்து மிக்கது என்பதுடன இலங்கையின் அமைதி தென்னாசியாவுக்குள்ளும் இந்து சமுத்திரத்துக்குள்ளும் அமெரிக்க நலன்களை பாதுகாக்க வல்லது. இதனால் இலங்கை அரசு விரும்புவதுபோல் வடக்கை தனிமைப்படுத்தி ஒரு தீர்வை வழங்குவது அமைதியைப் பேண வைப்பதுடன் அமெரிக்க-இலங்கை நெருக்கத்தை வலுப்படுத்தும் என கருதுகின்றது. அத்தகைய பாதுகாப்புக் கொள்கையில் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் கூட்டுத் தன்மை உண்டு என்ற அடிப்படையில் கிழக்கில் அரசியல் குழப்பத்தை தூண்டிவிட்டு அரசியல் இலாபம் தேட அமெரிக்கா முற்படுகின்றதெனவும் அவர் மேலும் தமது உரையில் தெரிவித்தார்.

கிழக்கில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்திற்கு பின்பு நடந்த பல படுகொலைகளுக்கு எத்தகைய வார்த்தையினையும் வெளியிடாத அமெரிக்கா, இராணுவ புலனாய்வு உறுப்பினர்கள் கொல்லப்பட்டபோது புலிகளை எச்சரித்திருந்ததுடன் கிழக்கில் ஏற்பட்டு வரும் நிலைமையைக் கண்டித்துமிருந்தது. மேலும் சிறுவர்களை படைக்கு சேர்ப்பதில் புலிகள் மீண்டும் ஈடுபட்டு வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. இதை ஒரு காலக்கிரமமான பணியாகவே அமெரிக்கா மேற்கொண்டும் வந்தது. எல்லாக் காலத்திலும் புலிகளை வெளிப்படையாக கண்டிக்காதது போலவும் அது காட்டிக் கொண்டது. என்று கூறினார். (27)

## மக்கள் சேவையை முற்றாக மறந்த கிராம அலுவலரை அகற்றக் கோரல்

(தென்மராட்சி)

கொடிகாமம் தெற்கு ஜெ-328 கிராமசேவையாளர் பொதுச் சேவைக்கு பொருத்தமற்றவர் எனத் தெரிவித்து இப்பகுதி மக்கள் பிரச்சினைகள் அடங்கிய கையெழுத்துப் பிரதிகளைப் பல தரப்பினருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

வறிய மக்களை அதிகளவு கொண்டுள்ள இப்பகுதிக்கு மேற்படி கிராமசேவையாளர் எதுவித உதவிகளையும் பெற்றுக் கொடுக்க முன்வரவில்லையென்றும் தனது கடமையைச் சரிவர ஆற்றுவதில்லையெனவும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

எனவே இந்த கிராமசேவையாளரை உடனடியாக இடமாற்ற நடவடிக்கை எடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இவரை உடனடியாக இடமாற்றக்கோரி இப்பகுதி மக்கள் பிரதிகளை வடகிழக்கு மாகாண விளையாட்டு அலுவல்கள் அமைச்சு அரச அதிபர் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் நட. ராஜா ரவிராஜ் மற்றும் தென்மராட்சி பிரதேசசபை போன்றவற்றிற்கு அனுப்பியுள்ளனர். நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் வெகுஜன மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கிராமசேவையாளர் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (28)

## சின்னமுத்து நோயைத் தடுக்க குடாநாட்டில் நடவடிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும் சின்னமுத்து நோயைக்கட்டுப்படுத்த நடவடிக்கைகளை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர் இதன்படி செப்டம்பர் 11,12,13ஆகிய திகதிகளில் குடாநாட்டில் உள்ள அனைத்து சுகாதார நிலையங்கள் சிகிச்சை மையங்களில் இதற்கான சிகிச்சை வழங்கப்படவுள்ளன. பதினாறு வயதில் இருந்து இருபது வயது வரை உள்ள ஆண்,பெண், இருபாலரும் இந்த நோய்க்கான தடுப்பு மருந்தை கட்டாயம் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் இதற்கான விழிப்புணர்வுப் பிரச்சார நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது . (28)

## போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்க தவறும் வாகன சாரதிகளால் ஆபத்து!

(தென்மராட்சி)

முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் சிறியரக வாகனம் முதல் கனரக வாகனம் வரை கட்டுப்பாடற்ற வேகத்தில் செல்வதால் வீதி விபத்துகள் இடம்பெறும் வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது.

வாகனச் சாரதிகளும் ஒன்றை ஒன்று முந்திச் செல்லும் அவசரத்தில் அசுர வேகத்தில் வருவதால் வீதிகளுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாட்டு குறியீட்டுப் பலகையை அவதானித்து பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

இதைப் போல் சந்திகள், திருப்பங்கள் மற்றும் பொது மக்கள கூடும் இடங்களை கணக்கில் எடுக்காமல் சாரதிகள் செயற்பட்டு வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பாதசாரிகள், துவிச்சக்கரவண்டிகளில் செல்வோர் உயிர்களை கையில் பிடித்தபடி செல்கின்றனர். பெற்றோலியப் பொருட்களை ஏற்றி வரும் கனரக வாகனங்கள் கூட புழுதிகளை எழுப்பியபடி வேகம் எடுத்துச் செல்வதால் பிரதான வீதிகளில் உள்ள கடைகளில் தூசிகள் சூழ்ந்து கடைகளில் உள்ள பொருட்கள் மாசுபடுவதாக வர்த்தகர்கள் புகார் தெரிவிக்கின்றனர். (28)

## வெடிபொருட்கள் அகற்றலை துரிதமாக்க படையினரின் ஒத்துழைப்பு போதுமானதாகவில்லை

-யாழ்.மிதிவெடிகள் செயற்பாட்டு அலுவலகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சிப் பகுதிகளில் வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட மிதிவெடிகள் செயற்பாட்டு ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி பிரதேசத்தில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குப் வெளியேயுள்ள நிலப்பரப்புக்கள் பலவற்றில் மக்கள் குடியேறக் கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை. காரணம் அப்பகுதிகளில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் கைவிடப்பட்ட வெடிபொருட்கள் அபாயம் அதிகம் காணப்படுகிறது.

இதனால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் மீளக் குடியமர முடியாமல் தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்து வருகின்றன. இதனைக் கருத்திற் கொண்டே மேற்படி பகுதிகளில் வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

எனினும் இந்த நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தப் படையினரின் ஒத்துழைப்பு போதாதிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (33)

## கதிர்காமம் சென்ற பக்தர்கள் கல்வீச்சுக்கு இலக்காகினர்

-மூவர் காயமடைவு

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் சென்று கொண்டிருந்த தமிழர்களின் மினிவான் கல்முனைக் குடியில் வைத்து நேற்று முன்தினம் கல்வீச்சுக்கு இலக்காகியதில் அதில் பயணம் செய்த ஆனந்தன் சாந்தி (வயது 30) என்பவர் படுகாயங்களுக்குள்ளானார். இரண்டு மினி வான்களின் கண்ணாடிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சவளக்கட்டு கிராமத்தைச் சேர்ந்த தாரகா விதவைகள் சங்கத்தினர் 60 பேர் கதிர்காமம் செல்வதற்காக 3 மினி வான்களில் திங்கட்கிழமை புறப்பட்டு வந்துள்ளனர். பட்டதாரிகள் சங்கத்தினரால் அம்பாறை மாவட்டத்தில் திங்களன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் இவர்கள் அன்றிரவு பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயத்தில் தங்கியுள்ளனர். செவ்வாய்க்கிழமை விடியற்காலை கதிர்காமம் செல்வதற்கு மினிவான்களை எடுத்துக் கொண்டு சென்றபோது கல்முனைக்குடியின் பிரதான வீதிகளில் கும்பல், கும்பலாக நின்று கொண்டிருந்த முஸ்லிம் தீவிரவாத வாலிபர்கள் இவர்கள் பயணம் செய்த மினிவான்கள் மீது சரமாரியாகக் கற்களை வீசியுள்ளனர்.இதனால் வானின் முன் பக்க கண்ணாடியும், பின் பக்க கண்ணாடிகளும் சேதமடைந்துள்ளன. கண்ணாடிகள் குத்தியதில் மூவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.அதிர்ஷ்டவசமாக அவ்வழியே ட்ரக் வண்டியில் வந்த விசேட அதிரடிப்படையினர் கல்வீச்சு நடத்தியவர்களை கலைத்து விட்டு கல்முனைவரை பாதுகாப்பாக கொண்டு வந்து விட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பொது மக்கள் இவர்களுக்கு உணவு சமைத்து கொடுத்துள்ளனர்.

## தீவகம் வேலணையில் சமகால அரசியல் கருத்தரங்கு

(தீவகம்)

யாழ். தீவகப் பிரதேச அரசியல் துறையினரது ஏற்பாட்டில் தீவக மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்று திங்கட்கிழமை மாலை வேலணையில் உள்ள இலவந்த பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

கிராம சேவகர் கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வேலணை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ்நம்பி, தீவக கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர், தீவக தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர்அருந்தவநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலைமைகள் பற்றிக் கருத்துரையாற்றினர்.

நாட்டின் சமகால அரசியல் நிலைமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இடம்பெற்ற இக் கருத்தரங்கில் பல நூற்றுக்கணக்கான மக்கள கலந்து கொண்டனர். (33)


## பிரதேச சபையின் கவனத்திற்கு!

யாழ்.திருநெல்வேலி கிழக்கில் உள்ள பூதவிராயர் வீதி நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் மிக மோசமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பலவித இடர்பாடுகளையும் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வீதியின் நிலை குறித்தும் நல்லூர் பிரதேச சபையினரிடம் முறைப்பாடு செய்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# யார் இந்த புளொட் மோகன்?



கடந்த வாரம் கொழும்பு பம்பலப்பிட்டியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் மோகன் என்கிற கந்தையா யோகராஜா, என்னதான் சிறிலங்கா பாதுகாப்புத் தலைமைப்பீடம் மறுத்தாலும் சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் சேர்ந்து இயங்கியவர், கிழக்கில் நடந்த பல படுகொலைகளுக்கு காரணமாக இருந்தவர் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியா சென்ற அவர் புளொட் இயக்கத்துக்கு இந்திய அரசு வழங்கிய இராணுவப் பயிற்சியில் முதலாவது அணியில் பயிற்சி எடுத்தவர். 1994 ஏப்ரல் மாதம் தமிழ்நாட்டில் தஞ்சாவூர் ஒரத்தநாடு பகுதியில் இருந்த புளொட்டின் வதை முகாமான- பி- முகாமில் இயங்கிய உளவுப் பிரிவில் கடமையாற்றிய இவர் அச்சுவேலியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் மற்றும் திருமலையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் உட்பட 12 பேரின் படுகொலைக்கு காரணமாக இருந்தவர்.

ஆரம்பத்தில் புளொட்டின் உட்கொலைகள் மற்றும் சித்திரவதைகளுக்குக் காரணமாயிருந்த சங்கிலி என்கிற கந்தசாமிக்கு விசுவாசமாக இருந்த இவர், கந்தசாமிக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட 1985 காலப்பகுதியில் 6 மாத காலம் புளொட் அமைப்பின் செயற்பாடுகளில் இருந்து நீக்கப்பட்டு பின்னர் மாணிக்கதாசனால் அவரது அணியில் இணைக்கப்பட்டார்.

1988 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் செட்டிகுளம் பகுதியில் மாணிக்க தாசனுடன் தங்கியிருந்த அவர்,ஈரோஸ் மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் மற்றும் ஆதரவாளர்கள் இருவர் உட்பட 6 பேரை கொலை செய்திருந்தார். இதில் மாணிக்கதாசன் பாலியல் தொடர்பு வைத்திருந்த ஒரு பெண்ணின் கணவரும்,அடக்கம்.

இந்தக் காலப்பகுதியில் மாணிக்கதாசனுடன் முறையற்ற உறவில் ஈடுபட்டதாக இவர் மீது விமர்சனங்கள் எழுந்ததை அடுத்து மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டார். 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் மட்டக்களப்புக்குச் சென்ற மோகன் இந்திய இராணுவத்துடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்காக அப்பாவித் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று காட்டிக்கொடுத்தார்.

1988ஆம் 89ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் மட்டக்களப்பு புதூர் விபுலானந்தா வீதியில் நான்காம் குறுக்குத் தெருவில் இந்திய இராணுவத்தின் உதவியோடு முகாம் அமைத்துத் தங்கியிருந்த மோகன் அவ்வீட்டில் வைத்து மட்டும் 300இற்கும் அதிகமான தமிழ் மக்களைப் படுகொலை செய்தார். இந்தப் படுகொலைகளை அம்பலப்படுத்தியதற்காக 1989ஆம் ஆண்டு மனித உரிமைகள் செயற்பாட்டாளரான கத்தோலிக்க மதகுரு அருட்திரு சந்திரா பெர்னாண்டோ மோகனால் படுகொலை செய்யப்பட்டார். இதேபோன்று மோகனுக்குக் கப்பம் கொடுக்க மறுத்த பேராசிரியர் நு.்.குமானின் சகோதரியும் அவரது கணவரும் சிற்றூர்தி ஒன்றில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலைச் சம்பவங்களில் மோகனுக்கு உதவியாக சிறிலங்காப்படைப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவரான முனாஸ், கேணல் ஸக்கி ஆகியோர் செயற்பட்டனர். 1988 இற்கும் 1994 இற்கும் இடைப்பட்ட காலத்தில் மொத்தம் அறுநூற்று இரண்டு பேரை தேசவிரோதி மோகன் நேரடியாகவே படுகொலை செய்துள்ளார். இதன் காரணமாகவே சிறிலங்கா அரசு மோகனை இராணுவப்புலனாய்வுப் பிரிவு உறுப்பினராக்கி கப்டன் தரப் பதவியும் வழங்கியிருந்தது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு பற்பொடிக்கம்பனி, சிறைச்சாலை முகாம்களிலே சிறிலங்காப் படைப் புலனாய்வுத் துறையின் முனாஸ், ஸக்கி ஆகியோருடன் இணைந்து வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், சித்தாண்டி, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் ஆயிரக் கணக்கான தமிழ்மக்களை துரோகி மோகன படுகொலை செய்திருந்தார்.

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இப்ராகிம் என்ற வைர வியாபாரியை கொலைசெய்து அவரிடமிருந்து 5 கோடிரூபா பெறுமதியான வைரங்களை கைப்பற்றியதை அடுத்து அதைப் பங்கு போடுவதில் மாணிக்கதாசனுடன் ஏற்பட்ட பிரச்சினையில் மோகன் புளொட் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

இதன் பின்னர் நாவற்குடாப்பகுதியில் கிராம சேவகர் திருமதி செபமாலை, அவரது சகோதரி, கர்ப்பிணித்தாயான திருமதி குமாரயோகரத்தினம் ஆகியோரை நடுவீதியில் வைத்துச் சுட்டுக்கொன்றதுடன், மட்டக்களப்பு இலங்கை வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் இலட்சுமிகாந்தனை சுட்டுப் படுகொலை செய்துள்ளார்.

இவற்றை விடவும் எம்.சீ.எம் விற்பனை நிலைய உரிமையாளரும் அவரது மகனும் மோகனால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்,

கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவத்தில் தனக்கு எதிராக சாட்சி சொன்ன கிராம சேவையாளர் கே.விஜயரத்தினம் மோகனதாஸ் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

இதேபோன்று விளாவெட்டுவானில் இரண்டு அப்பாவித்தமிழ்இளைஞர்களை தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்று குற்றம் சாட்டி அவர்களுடைய தலைகளைத் துண்டித்து மற்றொரு இளைஞனின் தோளில் வைத்துக்கொண்டு செல்ல வைத்துள்ளார்.

**(..திறலோன்..)**

இவற்றைவிடவும் தேசவிரோதி புளொட் மோகன், இராணுவ புலனாய்வு அதிகாரி முனாஸ் ஆகியோர் இணைந்து மட்டக்களப்பு பூம்புகார் மாடடிக்கும் முனை, வயிரவன் கோயிலடியில் பெருமளவான தமிழ் மக்களை இரவு வேளைகளில் ரயர்கள் போட்டு எரித்துள்ளனர். அவ்வாறு எரித்துக் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை இது வரை தெரியவரவில்லை.

1990ஆம் ஆண்டு 9ஆம் மாதம் 5ஆம் நாள் மட்டக்களப்பு வந்தாறு மூலைப் பல்கலைக்கழகத்தில் கைதுசெய்யப்பட்டிருந்த 158 பொதுமக்களும் இவர்களாலேயே வாழைச்சேனை கொழும்பு வீதியில் உள்ள நாவலடி நாலாம் கட்டைப்பகுதியில் வைத்து வெட்டிக்கொல்லப்பட்டனர்.

இதேபோன்று சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி ஆகிய பகுதிகளில் பிடிக்கப்பட்ட 184 மக்களில் பெண்கள் சத்துருக்கொண்டான் முகாமிற்குப் பின்னால் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியும் கண்கள் தோண்டப்பட்டும் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர். இச்செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்டவர் தேசவிரோதி புளொட் மோகன்,

இதே காலப்பகுதியில் தான் வெள்ளை வான் அச்சுறுத்தலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்திருந்தது.

மட்டக்களப்பு கரையாக்கன் தீவில் தான் கேட்ட கப்பப் பணத்தில் 10 ரூபா குறைந்ததற்காக ஒரு பெண்ணை தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர் என்று குற்றம் சாட்டி சுட்டுக்கொன்றுவிட்டு அப் பெண்ணின் சடலத்தை வீதியில் கட்டி இழுத்துச் சென்றது மோகன் என்ற மிருகத்தின் கொலை வெறிக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

இவற்றை விடவும் தேசவிரோதி மோகனால் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் உள்ளனர்.

எல்லாவற்றையும் விட பெருமளவான தமிழ் இளைஞர்கள் பணப்பறிப்புக்காக பிடிக்கப்பட்டு அவர்கள் பணம் செலுத்தத் தவறினால் அவர்களை தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் என்று குற்றம் சாட்டி சிறிலங்காப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைத்து அந்த இளைஞர்கள் சிறைகளில் வாடவும், உயிர்களை இழக்கவும் தேசவிரோதி புளொட் மோகன் காரணமாக இருந்துள்ளார்.

குறிப்பாக மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஓரிரு சம்பவங்களிற்காக அமைக்கப்பட்ட சிறிலங்கா அரசாங்கத்தின் விசாரணைக்குழுக்கள் என்பன புளொட் மோகனை மேற்படி படுகொலைச் சம்பவங்களிற்கான பொறுப்பாளராக சுட்டிக்காட்டியிருந்தன.

மொத்தத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சிறிலங்காப் படைகளால் செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் நேரடியாகப் பங்குபற்றியிருந்த மோகன் கொல்லப்பட்டதானது ஈழப்போராட்ட வரலாற்றில் பதிவுக்குள்ளாக்கப்படும் ஒரு சம்பவமாக அமையும்.

---

# திறமையற்றோர் இராணுவத்தில் இருந்ததால் கடந்த காலத்தில் பாரிய இழப்பு ஏற்பட்டது

**-பிரிகேடியர் சூரியாராச்சி தெரிவிப்பு**

(கொழும்பு)

கடந்த காலங்களில் திறமையற்ற பயிற்சியில்லாதவர்களே இராணுவ வைத்திய சேவைகளிலும் புலனாய்வுத்துறைகளிலும் இயங்கிவந்தனர். அதன் விளைவாக இராணுவத் தரப்பில் பாரிய இழப்பு ஏற்பட்டதாக நாட்டையும், மக்களையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு இராணுவத்தினரிடமே இருக்கிறது. அதன் முழுப்பயனையும் பெறஉதவுவது இவ்வாறான சிறந்த பயிற்சிகளே.

இவ்வாறு அனுராதபுரம் தலாவ இராணுவப் பொறியியல் சேவைக்குப் பொறுப்பான பிரிகேடியர் சூரியாராச்சி தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் பொறியியல் கற்கைநெறியின் ஆரம்பப் பயிற்சியை முடித்து வெளியேறும் இராணுவத்தினர் முன்னிலையில் உரைபாற்றும்போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, யுத்தத்தால் பெரிதும பாதிக்கப்படுவது இராணுவத்தினரும் அவர் சார்ந்த உறவினர்களுமே தற்காலிக சமாதானமே தற்போது ஏற்பட்டுள்ளது. என்றும் யுத்தத்தைத் தமக்குச் சாதகமாக மாற்றுவதற்கு சிறந்த பயிற்சிகள் அவசியம் என்றும அவர் தெரிவித்துள்ளார்.

# 4000 பேரை அரச சேவையில் சேர்த்துக் கொள்ள முடிவு

**-பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு**

(கொழும்பு)

அரசாங்க சேவைகளில் புதிதாக 4000 பேரை இணைத்துக் கொள்வதென்று பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள லிகிதர் சேவை மற்றும் அதற்கு இணையான பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்வதற்கென்று நடத்தப்பட்ட லிகிதர் சேவை மற்றும் அதற்கு இணையான போட்டிப் பரீட்சைகளில் 3 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகளை இலங்கைப் பரீட்சை திணைக்களம் பொது நிர்வாக அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 4000 பேர் இந்த சேவைகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு கூறியுள்ளது.

# அமைச்சின் கண்ணாடி இழைப்படகை வைத்திருந்த நபர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

தனியாரின் பாவனையில் இருந்த மீன்பிடி அமைச்சிற்குச் சொந்தமான மீன்பிடிப்படகும் அதற்கான இயந்திரமும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

கடந்த பதினைந்து மாதகாலமாக மீன்பிடி அமைச்சிடம் ஒப்படைக்கப்படாது மாத்தறை 'கினிகஸ்முல்ல' பகுதியில் தனிப்பட்டவர்களால் தமது தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுவந்த கண்ணாடி இழைப்படகும் 15 குதிரைவலுக்கொண்ட அதற்கான இயந்திரமுமே பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி இரண்டு மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கும் பொலிசார் இவற்றைத் தன்வசம் வைத்திருந்த நபரையும் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.


# மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு 35 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(மன்னார்)

மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் இந்தத் தடவை மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கென 35 இலட்சம் ரூபாவினை வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதற்கு செல்வம்அடைக்கலநாதன். விநோதலிங்கம் ஆகியோர் தமக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ள அதே சமயம் சிவசக்தி ஆனந்தன், கிசோக்குமார், ஆகியோரும் கணிசமான அளவு நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளனர். இந் நிதியின் மூலம் கடந்த போர்க்காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் கல்வி, சுகாதாரம் சமூக அடிப்படைத்தேவைகள் வீதி அபிவிருத்தி என்பனவற்றிற்கும் பயன்படுத்தப்படும் என அறியப்படுகின்றது. (மி)

# பிரதம நீதியரசர் மீது குற்றச்சாட்டு அவர் செய்யக் கூடியது என்ன?



சிறிலங்காவின் பாராளுமன்றத்துக்கு அடுத்தபடியாக இருப்பினும் பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் ஒரு உயர் நிறுவனமாக உயர் நீதிமன்றம் உள்ளது. அதன் பிரதம நீதியரசர் நேர்மையான கடமை தவறாத உன்னதபணியை மேற்கொள்பவராவார். ஆயினும் அவர் மீதும் நம்பிக்கையிழக்கும் நேரமும் சம்பவங்களும் நிகழ்ந்து வருவதாக உள்ளன.

பிரதம நீதியரசரான சரத் என் சில்வாவுக்: கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் யாது நிகழும் என்பது மக்களின் வினாவாகிறது.

1984 ஆம் ஆண்டில் அன்று பிரதம நிதியரசராகவிருந்த நெவில் சமரக்கோனுக்கு எதிராக விசாரணைக் குழு (தெரிவுக்கு குழு) ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென கோரப்பட்ட வேளை அன்றைய எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சரத் முத்தெட்டு வேகம மறுப்புத் தெரிவித்து "சபாநாயகர் அவர்களே இந்தப் பிரேரணை கொண்டுவந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளை நீங்கள் அறிவீர்கள். தெரிவுக்குழுவொன்று அமைத்து விசாரணை நடந்தால் பிரதம நீதியரசரோ ஏனைய நீதியரசரோ தமது சார்பில் ஏதாவது கூறுமாறு கேட்கப்பட்டால் அவர் உங்களுக்கு (சபாநாய கருக்கு) வேண்டியவாறு நான் செயற்பட முடியாது எனக் கூறினால், நான் கூறியது போல் தேவையில்லாதவிளைவு ஏற்படும் அப் போது நீங்கள் என்ன செய்வீகள்? அவர்களைக் கைது செய்ய உத்தரவிடுவீர்கள் காரணம் அவர் பாராளுமன்றத்தை அவமதித்தார் என்பதால்" இது அன்று சரத் முத்தெட்டு வேகமவின் கூற்றாகும்.

இது அன்று நெவில் சமரக்கோன் விசாரணைக்குழு முன் சமுகமளிக்காமல் விட்டால் கைது செய்யப்படுவார் என சிந்தித்து கூறியதாகும். நாட்டினதும் மக்களினதும் கடமையை பிரதிபலிக்கும் நிறுவனமான உயர் நீதி மன்றத்தின் கௌரவத்தையும் இழக்க அவர்

**"அரசியல்வாதிமீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தால் அதனை அவர் எதிர்க்கட்சியினரின் வேலை என எதிர்த்துவாதாடலாம். அல்லது கணக்கில் எடுக்காமல் விடலாம். எனினும் நாட்டின் அதி உயர் பீடமான உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கெதிராக குற்றப் பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டால் அவர்மேற்சொன்னவாறு நடந்துகொள்ள முடியாது"**

விரும்பாததால் நெவில் சமரகோன் விசாரணைக்கு முகம் கொடுப்பதை தவிர்க்கவில்லை.

அரசியல்வாதிமீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தால் அதனை அவர் எதிர்க்கட்சியினரின் வேலை என எதிர்த்துவாதாடலாம். அல்லது கணக்கில் எடுக்காமல் விடலாம். எனினும் நாட்டின் அதிஉயர் பீடமான உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கெதிராக குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டால் அவர் மேற்சொன்னவாறு நடந்து கொள்ள முடியாது. அத்துடன் பொறுப்புடன் பதில் சொல்ல வேண்டியவராகிறார். அவருக்கு எதிரானவர் ஆதரவாளர் என்று இருக்க முடியாது. அவ்வாறு அவருக்கு எதிர்ப்புத் தோன்றுமிடத்து அவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதே நல்லது. அது அவருக்கு கௌரவமுமாகும் அது மட்டுமன்றி நீதியைக் கட்டிக் காக்கும் உயர் நிறுவனமான நீதிமன்றில் அவர் பதவிவகிக்கும் அடிப்படை உரிமையையும் இழக்கிறார் மட்டுமன்றி எதிராளி ஒருவர் இனி தனக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்படாது எனவும் நினைக்கலாம்.

நீதியரசர் இவ்வாறும் சிந்திக்கலாம் உயர் நீதிமன்றுக்கு அதிகாரத்தை வழங்கும், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் எனது நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்ய குழுவொன்றை நியமிக்க பிரேரணை கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கு உறுப்பினர்களின் தொகை பற்றி சிந்திக்காமல் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்திருந்தாலும் அது எனது பதவிக்கு ஏற்படும் கௌரவக் குறைவாகும்.நான் குற்றவாளியோ நிரபராதியோ தெரிவுக் குழுவொன்றின் முன்னால் விசாரிக்கப்படும் போது எனது பதவியைத் தாரைவார்த்து கொடுப்பதற்கு ஒப்பானதாகும் என்று.

ஒரு அரசாங்கத்தை ஒருசிலர் பதவிஏற்ற, ஒரு சிலர்பதவியிறக்க முடியும் எனினும் உயர்நீதிமன்ற நீதியரசர் என்பவர் அனைத்து மக்களினதும் மனங்களையும் வெல்ல வேண்டியவராவார். எதிர்க்கட்சியினர் என்றோ ஆளும் கட்சியினர் என்றோ பாகுபாடு காட்ட முடியாது அரசியல்வாதி ஒருவருக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தலாம் சுவரொட்டிகள் ஒட்டலாம் நீதியரசருக்கு எதிராக நிதிமன்றம் அவ்வாறு செய்ய முடியாது. அரசியல்வாதி ஒருவர் ஊழல் மோசடிகளில் ஈடுபடலாம் நீதியரசர் அவ்வாறு செய்ய முடியாது. அவ்வாறு செய்பவராயின் அவர் அப்பதவியில் இருக்கமுடியரது.

இதற்கு உதாரணமாக அன்று ஜே.ஆரின் அரசு காலத்தில் தமக்கு எதிராக தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதை அறிந்தவுடனேயே பதவியிலிருந்து நெவில் சமரக்கோன் விலகப் போவதாக தமது நெருங்கிய நண்பர்ஒருவரிடம் தெரிவித்தார். அதன் போது நண்பர் எதிர்க்கட்சியின் ஆதரவைப் பெற்றுத்தருவதாகக் கூறியும் அவர் அதற்கு இசையவில்லை.

ஜே.ஆர் பதவிக்கு வரும் போது நெவில் சமரக்கோன் வெளிநாட்டில் இருந்தார். அப் போது அவர் பிரபல சட்டத்தரணியாக இருந்தார்.

ஜே.ஆர் பதவியேற்றதும் அவரை இந்நாட்டுக்கு வரவழைத்து நீதியரசர் பதவியை வழங்கினார். என ஜே.ஆர் பற்றிய சரிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பின் கீழ் நீதிச் சேவையைப் பலப்படுத்தும் எண்ணம் ஜே.ஆரிடம் இருந்தாலும் அப்போதைய எதிர்க்கட்சியான ஐக்கிய முன்னணியால் நியமிக்கப்பட்ட சில உயர் நீதிமன்ற நீதிபதிகளின் கட்சிசார்பான கொள்கை காரணமாக அவர் பின்வாங்க வேண்டியேற்பட்டது.

அதனால் அவருக்கும் அரசுக்கும் அப்போது ஏற்பட்ட நிலைமைக்கு பரிகாரம் தேடவேண்டியேற்பட்டது.

அந்தவகையில் அவர் எடுத்த முதலாவது நடவடிக்கையாக பிரபல சட்டத்தரணியாக திறம்பட செயலாற்றிய ஒருவரை சிவில் நீதிபதியாக நியமித்தார். ஆயினும் அன்று பதவியிலிருந்த உயர் நீதிமன்ற நீதிபதிகளின் உரிமைகளையும் ஏனைய சட்டத்தரணிகளின் உரிமைகளையும் பறித்துவிட்டார் என்று கருதி சனாதிபதி மீது அவர்கள் அதிருப்தியடைந்தனர். எனினும் இச்சம்பவம் ஒரு பொருட்டாக கருதப்படவில்லை. இதன்போது நெவில் சமரக்கோன் உடனடியாக தான் ஜே.ஆருடன் தொடர்பு இல்லாததை அறிவித்துவிட்டார். உண்மையில் அவர் அநேகமான சந்தர்ப்பங்களில் அரசை பகிரங்கமாக விமர்சித்தவராவார். அரசாங்கத்துக்கு வளைந்து கொடுக்காதிருந்தார். நிறைவேற்று அதிகார முறைக்கு அவர் எதிர்ப்புக் காட்டியே வந்தார்.

(உப்புள் ஜோசப் பர்னாந்து)
(லங்காதீப)
தமிழில் :- வடிவேல்

தான் அப்போதைய ஜே.ஆரின் அரசுக்கோ ஐ.தே.கட்சிக்கோ தலைசாய்க்காது நடவடிக்கைகளிலும் பிரசாரங்களிலும் ஈடுபட்டார்.ஒரு சந்தர்ப்பத்தில் அவர் அரசைக் கடுமையாக சாடிப் பேசி எதிர்க்கட்சி வீரராக மாறினார்.

ஆனால் இதனை ஜீரணிக்க முடியாத ஜே.ஆர். அவருக்கெதிராக விசாரணை நடத்தத் தெரிவுக்குழுவொன்றை நியமித்தார்.இத்தெரிவுக்குழு நியமனத்தின் விவாதத்தின்போது சமரக்கோனைப் பற்றி கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அவருக்கெதிராகப் பல குற்றச்சாடுகள் சோடிக் கப்பட்டன. அத்துடன் அவரின் நடவடிக்கை எல்லை பின்வருமாறு அமைய வேண்டும் என்றும் கூறப்பட்டது. அதாவது,

"சாதாரண குடிமக்களின் எதிர்பார்ப்புக்களான வாழ்க்கை வரம்பு நடவடிக்கைகளின் கட்டுப்பாடுகள் நீதிபதிகளின் விருப்புக்குட்படும். இது எழுத்துமூலம் அறிவிக்கப்படும்." "பாராளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் விட பிரத்தியேக குழுக்களின் நடவடிக்கைகளுக்கு எல்லை வரம்பில்லாதிருப்பதால் அவர்கள் நினைத்தமாதிரியான பிரேரணைகளைக் கொண்டு வருகிறார்கள். இதனைமாற்ற வேண்டும்." "நீதிபதிகள் மக்களின் விமர்சனங்களுக்கு ஆளாக நேரிடும அறிக்கைகளையும் நடவடிக்கைகளையும் தவிர்க்க வேண்டும். ஒருபோதும் நீதிபதிகள் அரசியல் கட்சிகளின் பக்கம் சேரக் கூடாது. அரசியல் தொடர்பானதோ இல்லையோ நீதிபதிகள் வாய் திறக்காமல் இருக்கவேண்டும். ஊடகங்களுக்கு பேட்டியளித்தல் செய்திவழங்கல் என்பதை தவிர்க்க வேண்டும்.

இவ்வாறான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் காட்டி நெவில்சமரக்கோன் மீது குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆயினும் அவர் அதற்கு முன்னரே தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு வீடு திரும்பிவிட்டார்.

அன்றிலிருந்து இன்றுவரை தற்போதைய நீதியரசருக்கு எதிராக தேர்வுக்குழு அமைக்கும் விவகாரம் தொடர்கிறது.

ஆயினும் அவர் இவ்வாறான ஒன்றுக்கு முகம்கொடுப்பது முதல் முறையல்ல. 2001ஆம் ஆண்டு ஐ.தே.கட்சியும், ஜே.வி.பி.யும் இணைந்து சரத்என் சில்வாவுக்கெதிராக சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்கவிடம் ஊழல் குற்றச்சாட்டை முன்வைத்தன. அதனை விசாரிப்பது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் மூலம் பாராளுமன்றத்திற்கு தடையுத்தரவு கிடைக்கப்பெற்றாலும் அவ்வாறு தடையுத்தரவைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றிற்கு அதிகாரம் கிடையாது என சபாநாயகர் அநுரா வாதிட்டார். அதற்கிடையில் சனாதிபதி பாராளுமன்றை ஒத்திவைத்ததுடன் பின்னர் பாராளுமன்றைக் கலைத்து விட்டார். அத்தோடு ஊழல் மோசடி மீதான விசாரணையும் உயிரிழந்தது.

மீண்டும் 2003ஆம் ஆண்டு தற்போதைய பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அப்போதும் சனாதிபதி பாராளுமன்றைக் கலைத்து விசாரணையைத் தவிர்த்து விட்டதுடன் மனோ-மலிக் பேச்சுக்கள் மூலம் ஐ.தே.கட்சிக்கு அழுத்தத்தைக் கொடுத்தது. இறுதியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றதன் மூலம் மேற்படி விசாரணை ரத்துச் செய்யப்பட்டது.

ஆகவே தற்போது பெண் ஒருவருடன் சரத்என்சில்வா காணப்பட்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் அவருக்கெதிரான விசாரணையை நடத்தாமல்விட மீண்டும் சந்திரிகா பாராளுமன்றைக் கலைப்பாரா ?

# டோக்கியோ மாநாட்டு நிதி உதவி இல.க்கு கிடைக்காதுபோகும் நிலை

### – ஐ.தே.க. துணைச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க

டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு தருவதாக உறுதியளிக்கப்பட்ட 4.5 பில்லியன் டொலர்கள் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் துணை செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்

சமாதான முனைப்புகளில் அரசாங்கம் பின்னடிப்பை மேற்கொண்டு வருவதே இதற்கான காரணமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர், டோக்கியோ மாநாட்டின் நிதி இலங்கைக்கு கிடைக்காமல் போவதற்காக சனாதிபதி நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் எனவும் கேட்டுள்ளார்

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றதன் மூலம் சனாதிபதி சமாதான முனைப்புகளுக்கு பாதகத்தை ஏற்படுத்தியதாகவும், திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்நாட்டின்வாழ்க்கைச் செலவை குறைக்கப் போவதாக சனாதிபதி கூறுகின்றபோதும்,நாளுக்கு நாள் வாழ்க்கைசெலவு அதிகரித்து செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் (32)

## 35 பேர்டம் விசாரணை

களுத்துறைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கு நஞ்சூட்டப்பட்ட உணவு வழங்கிய விடயம் தொடர்பாக இது வரை 35 பேர் வரை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மூன்று கைதிகளுக்கு வழங்கப்பட்ட காலையுணவில் நஞ்சு கலந்திருந்தமை தொடர்பாக சிறைச்சாலை சமையற்காரர், சிறைக்கைதிகள் மற்றும் ஊழியர்கள் என 35 பேர் சிறைச்சாலை அதிகாரிகளினாலும், பொலிசாரினாலும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

**தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

**01. பணிநிலை :-** பண்ணை முகாமையாளர் [தரம்- 03]

**தகைமை :-** ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாயக் கல்வி நிறுவனமொன்றின் பொருத்தமான கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன், பண்ணைமுகாமைத் துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

பண்ணை முகாமைத்துறையில் குறைந்ததுஏழு (07) ஆண்டுகள் பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

**அகவை :-** 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

**மாதாந்த ஊதியம்:-** 8,000 - 12,000 / 200 x 20 + 4,000

**02. பணிநிலை :-** பண்ணை மேற்பார்வையாளர் [தரம் 03]

**தகைமை :-** பண்ணை மேற்பார்வை தொடர்பில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகளிற்கு குறையாத பட்டறிவு உடையவராக இருக்க வேண்டும்.

**அகவை :-** 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

**மாதாந்த ஊதியம:-** 6,000 - 9,000 / 150 x 20 + 4,000

மேற்காட்டப்பட்ட பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு 2004.08.11 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.9766)

# அரசு எம்முடன் கலந்து பேச மீண்டும் சந்தர்ப்பம் அளிப்போம்

### - ஜாதிகஹெல உறுமய

(கொழும்பு)

அரசுக்கு ஆதரவளிக்க ஜாதிக ஹெலஉறுமய தயாராக உள்ளது. ஆனால் அரசாங்கம் எமது ஆதரவை ஏற்பதற்கு தயாராக இல்லை என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உடுவேதம்மாலோக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எம்முடன் கலந்தாலோசிப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதென தம்மாலோகதேரர் கூறியுள்ளார்.

# பொலிஸ் ஆணைக்குழு வழங்கிய பதவி உயர்வுகள் ரத்து

பொலிஸ் பரிசோதகர்களுக்கு பொலிஸ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பதவியுயர்வுகள் யாவும் உயர்நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பொலிஸ்துறையின் 18 பேர் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையிலேயே இந்த உத்தரவு இன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொல்கொட கொலைகள் மற்றும் கொபேஹன அழகியின் கொலை என்பவற்றில் குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள காவல்துறையினருக்கு கூட பரிசோதகர் நிலை வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது தீர்ப்பின் போது கருத்துரைத்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, சுயாதீன காவல்துறை ஆணைக்குழுவின் இவ்வாறான செயற்பாடுகள் அந்த ஆணைக் குழுவின் மீதுள்ள நம்பிக்கையை இழக்கச்செய்துள்ளதாகக் குறிப்பிட்டார். (32)

# ஆயுதங்களுடன் கைதான கருணாவின் சகாக்களுக்கு பிணை

(கொழும்பு)

காத்தான் குடியில் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஆயுதங்களுடன் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட கருணாவின் சகாக்கள் மூவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய தலா ஐம்பதாயிரம் ரூபா ரொக்கம் மற்றும் இரு ஆட்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மயூரன் என அழைக்கப்படும் சாமித்தம்பி இராஜன், மனோகர் என அழைக்கப்படும் வேலாப்போடி வரதகுமார், மற்றும் குருபரன் எனப்படும் அரசமணி சுரேஸ் ஆகியோரையே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது.இதேவேளை இவர்கள் மூவரையும் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள சீ.ஐ.டி தலைமையகத்தில் ஆஜராக வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இந்த மூன்றுபேரையும் எவரும் பிணையில் எடுத்துச் செல்ல முன்வராத காரணத்தினால் இவர்கள் மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மயூரன் என அழைக்கப்படும் சாமித்தம்பி ராஜன் மனோகர் எனஅழைக்கப்படும் வேலாப்போடி வரதகுமார் குருபரன் என அழைக்கப்படும் அரசமணி சுரேஸ்

# சபிண்டீகரண அழைப்பு

**அன்புடையீர்!**

**நிகழும் தாரணவருடம் ஆடிமாதம் 06.07.2004ஆம் திகதி சிவபதமடைந்த**

**தங்க மகளாக 13 - 04 - 1960**



**தங்காத தாயாக 06 - 07 - 2004**

அமரர்

## திருமதி. ஞானமலர் செல்வராசா (மலர்)

அவர்களின் சபிண்டீகரண கிரியை ஆவணிமாதம் (05.08.2004 வியாழக்கிழமை மு.ப.8.30 மணிக்கு விசுவமடு இல்லத்தில் நடைபெறும் அத்தருணம், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோரும், உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.186/1
அதிசய விநாயகர் வீதி
(புளியடி)
விசுமடு மேற்கு, விசுவமடு. (4875)

**கணவன்,**
**சகோதரர்கள்.**

# ஐக்கிய முற்போக்கு கூட்டணி- இடதுசாரிகள் ஒருங்கிணைப்புக் குழு டில்லியில் உருவாக்கம்

(புதுடில்லி)

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை சுமுகமான முறையில் நடத்திச் செல்வதற்கான ஐக்கிய முற்போக்கு கூட்டணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்து ஒருங்கிணைப்புக்குழு உருவாக்கப்பட்டுள்ளதாக மார்க்சிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது. ஆனால் இக்குழுவின் தி.மு.க லாலுவின் ராஷ்ட்ரீயா ஜனதா தளம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் இடம் பெறவில்லை. இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமை நிர்வாக குழு உறுப்பினர் பிரகாஷ் காராத் செய்தியாளர்களிடம் கூறியதாவது; ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை சுமுகமான முறையில் நடத்திச் செல்லும் நோக்கில் இந்த ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவில் பிரதமர் மன்மோகன் சிங் ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியாகாந்தி மற்றும் இடதுசாரிக்கட்சிகள் சார்பில் ஹர்கிஷண் சிங் சுர்ஜித், சீதாராம் ஜெயசூலி (இருவரும் மார்க்சிஸ்ட்) ஏ.பி.பரதன், டி.ராஜா (இருவரும் இந்திய கம்யூ) தேவவிரளத விஸ்வாஸ் (பார்வார்டு பிபாக்) அவானி ராஜ் (ஆர்.எஸ்.பி.) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

முக்கியமான விசயங்கள் விவாதிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட துறைஅமைச்சர்களை அழைத்து இக் குழு ஆலோசனை நடத்தும். காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் அல்லாத கட்சிகளான ஆர்.யோ.டி, தி.மு.க. தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் சார்பில் எவரும் இக்குழுவில் இடம்பெறவில்லை. காப்புறுதி உள்ளிட்ட அரசின் மூன்று முக்கியதுறைகளில் அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பு அளவை அதிகரிக்க மத்தியரசு மேற்கொண்ட முடிவுக்கு இடது சாரிக் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன இதனால் அரசுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வந்தன. இந்நிலையில் மார்க்சிஸ்ட் கட்சியில் மூத்த தலைவர் ஜோதி பாசு, ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் சோனியா காந்தியை கடந்தவாரம் சந்தித்துப் பேசினார். அப்போது ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. இதையடுத்து ஒருங்கிணைப்புக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. முக்கியமான விசயங்கள் குறித்து விவாதிக்க நடைமுறைக்கு சாத்தியமான வழியென்ன என்று ஆராய்ந்தோம். அதன்முடிவில் உருவானது தான் இந்த ஒருங்கிணைப்புக் குழு மத்தியரசு என்னசெய்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு தேவைப்பட்டால் எங்கள் கவலைகளையும் எதிர்ப்பையும் தெரிவிப்போம் என்று கூறியுள்ளார்.


போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டம் (கார்ப்)

## கேள்வி அறிவித்தலில் திருத்தம்

நேற்றைய ஈழநாதம் பத்திரிகையின் 8 ஆம் பக்கத்தில் யாழ். மாவட்ட கேள்விச்சபைத்தலைவரும் அரச அதிபருமான செ. பத்மநாதனால் வெளியிடப்பட்ட

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்ட யாழ். மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல-02 என்னும் விளம்பரத்தில்

ஒப்பந்த இனங்காட்டல் இலக்கங்களில் தவறு நேர்ந்துள்ளது. அந்த இலக்கங்கள் அனைத்தும் JF என்ற ஆங்கில எழுத்துக்களுடன் ஆரம்பிக்க வேண்டும். தவறுதலாக அவை JE என்று அச்சாகி உள்ளன. திருத்தி வாசிக்கவும்.

இதே விளம்பரத்தில் பன்னிரெண்டாவது ஒப்பந்தத்தின் பெயர் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் 5.48 கி.மீ. அளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல் என்று இருப்பது தவறாகும். அது "வலிகாமம் தெற்குப்பிரதேச சபையின் 5.48 கி.மீ அளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல்" என்று அதனையும் திருத்தி வாசிக்கவும்.

தவறுகளுக்கு வருந்துகின்றோம்.



## சாவு அறிவித்தல்



அமரர்

### செல்லையா காத்தலிங்கம்

சாவகச்சேரி கல்வயலைப்பிறப்பிடமாகவும், புத்தடி விசுவமடு இல. 19/2 ஐ வசிப்பிடமாகவும் கொண்டவரான திரு. செல்லையா காத்தலிங்கம் அவர்கள் கடந்த 03. 08. 2004 அன்று சுகவீனம் காரணமாகச் சாவடைந்தார்.

இவர் காலம்சென்ற செல்லையா இராசம்மா தம்பதிகளின் புதல்வரும், சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், தயாபரன் (லண்டன்),தர்சினி (பொறியியலாளர் பீடம் இறுதியாண்டு பேராதனை பல்கலைக்கழகம்), நிர்மலன் (மருத்துவபீடம் முதலாம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் அவரது இல்லத்தில் 05. 08. 2004 மு. ப 11. 00 மணிக்குநடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
திருமதி வி.கேதனி (4878)


## ஆணையர்களை அதிகரிக்க எதிர்ப்பு

(புதுடில்லி)

தேர்தல் ஆணையகத்தில் மூன்று ஆணையர்கள் எண்ணிக்கையே போதுமானது அதற்கு மேல்தேர்தல் ஆணையகத்தில் கூடுதலாக ஆணையர்களை நியமிக்க கூடாது என்று தேர்தல் ஆணையகம் யோசனை தெரிவித்துள்ளது. இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தலைமைத் தேர்தல் ஆணையர் டி.எஸ். கிருஸ்ணமூர்த்தி பரிந்துரைத்துள்ளார். தேர்தல் விவகாரங்கள் தொடர்பான சிக்கலான விசயங்களுக்குத் தீர்வு காணும் வல் லமை மூன்று ஆணையர்கள் இடம்பெற்றுள்ள தேர்தல் ஆணையகத்துக்கு உள்ளது. எனவே கூடுதல் ஆணையர்களை நியமிக்கும் உத்தேசத்தை கைவிட வேண்டும் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு அரசியல் சாசன ரீதியில் அளிக்கப்பட்டுவரும் பணிப்பாதுகாப்பைப் போலவே இதர இரு ஆணையர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். கட்சித் தாவல் தடைச்சட்டத்தின் கீழ் எம்பிக்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களை பதவி நீக்கம்செய்யும் அதிகாரத்தையும் இதர இரு ஆணையர்களுக்கு வழங்க வேண்டுமென அதில் கூறப்பட்டுள்ளது.

## எயிட்சைத் தடுக்க தீவிர ஆய்வு

(புதுடில்லி)

எயிட்ஸ் நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்தைக் கண்டு பிடிக்க தீவிர ஆய்வு மேற்கொள்ளும்படி விஞ்ஞானிகளை இந்தியக் குடியரசுத் தலைவர் கலாம் வலியுறுத்தினார். குடியரசுத் தலைவர் மாளிகையில் செவ்வாய்க்கிழமை பி.சி.ராய் விருதுகளை வழங்கி அவர் பேசினார். மருத்துவத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 54 மருத்துவ நிபுணர்களுக்கு அவர் விருதுகளை வழங்கினார். எயிட்ஸ் நோயைத் தடுப்பதற்கான மருந்தைக் கண்டு பிடிப்பதில் இந்தியா தீவிர ஆய்வு மேற்கொண்டுள்ளது. இதன் பலன் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் கூறினார்.


## திருத்தம்

03.08.2004 நேற்று செவ்வாய்க்கிழமை ஈழநாதம் பத்திரிகையில் 9 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட முக்கிய அறிவித்தல் எனும் விளம்பரத்தில் 3 ஆம் பந்தியில் வெள்ளை எருத்தன் தென்னியங்குளத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பது தவறானது. வெள்ளை எருத்தன் S.S குறியுடையது தென்னியங்குளத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.



## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### துரையப்பா – நாகமுத்து

சொந்தமுகவரி:- கொந்தக்காரன் குளம்ஓமந்தை
தற்போதைய முகவரி:-பம்பைமடு,வவுனியா

எ மது நிறுவனத்தில் பணிபுரியும் து. மகேந்திரராசா (இந்திரன்) அவர்களது தாயார் 03.08.2004 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

நினைவில் நனைந்தபடி
பொறுப்பாளர், போராளிகள், பணியாளர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
நடுவப்பணியகம்,
வட்டக்கச்சி

(சி.9771)



## மனிதவள மேம்பாட்டுப்பகுதி நிதித்துறை

தரக்கட்டுப்பாட்டாளர் பணிநிலைக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன

### தகைமைகள்

க. பொ. த உயர்தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன் பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும்

அகவை:-25 தொடக்கம் 55 வரை

### குறிப்பு

விண்ணப்ப முடிவு நாள்:10. 08. 2004

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள-
12. 08. 2004 காலை 9. 00 மணி

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-
மனிதவள மேம்பாட்டுப்பகுதி
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்,பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ்களோடு வருக.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,

(சி.9770)

தென்னாபிரிக்கா–சிறிலங்கா முதல் டெஸ்ட்

# ஷேன் பொலக்கின் அபார பந்துவீச்சில் சிறிலங்கா 279/7 விக்கெட்டை இழந்தது




சிறிலங்காவுக்கு சுற்றுலாவை மேற் கொண்டுள்ள தென்னா பிரிக்க அணிக்கும் சிறிலங்கா அணிக் கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று காலி சர்வ தேச விளையாட்ட ரங்கில் ஆரம்ப மானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதல் நாள் ஆட்டநேர முடிவின் போது 7 விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சிறிலங்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சனத்ஜெயசூரியவும், அத்தப்பத்துவும் ஷேன் பொலக்கின் சிறப்பான பந்து வீச்சில் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். பின்னர் ஆடுகளம் நுழைந்த குமார் சங்கக்காரவும் மகேல ஜெயவர்த்தனவும் இணைந்து அதிக ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். சங்கக்கார 58 ஓட்டங்களையும், ஜெய வர்த்தன ஆட்டமிழக்காது 116 ஓட்டங் களையும் பெற்று ஓட்ட எண்ணிக் கையை அதிகரிக்க வலுவூட்டினர். அடுத்தபடியாக களுவித்தாரண 33 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற் றார். ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்தனர்.



சதம் பெற்ற மகிழ்ச்சியில் ஜெயவர்த்தன

பந்து வீச்சில் முன்னாள் அணித் தலைவரும், வேகப்பந்து வீச்சாளரு மான பொலக் 4 விக்கெட்டுக்களையும், நிற்றினி, ஹவாட், நிக்கி போயே ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## சாதனை குறித்து கவலையில்லை

### முத்தையா முரளிதரன்

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக் கெட்டுக்களை யார் எடுப்பது என்ற போட்டி குறித்து தான் கவலைப்படவில்லை என்று இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத் தையா முரளிதரன் கூறியுள்ளார். 527 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்திய முரளிதரனின் சாதனையை அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் சமீபத்தில் சமன் செய்தார். இது குறித்து முரளிதரன் தெரிவிக்கையில்; டெஸ்ட் போட்டியில் யார் அதிக விக்கெட்டுக் களை வீழ்த்துகிறார் என்ற போட்டி குறித்து நான் கவலைப்படவில்லை. நாங்கள் இருவரும் நீண்ட காலத்திற்கு விளையாட உள்ளோம். ஒருபோட்டியில் நான் வோர்னைமுந்திய தாகவும், மற்றொரு போட்டியில் வோர்ன் என்னை முந்தியதாகவும் கூறுவார்கள். ஆனால் இதைப்பற்றியெல்லாம் கவலைப்பட வில்லை என்றார் முரளிதரன்.

காலி ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக் குச் சாதகமானது. இம்மைதானத்தில் முரளி தரன் மூன்று முறை 10இற்கும் மேற்பட்ட விக் கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 2000 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராகவும், 2001இல் மேற்கிந்தியதீவுகளுக்கு எதிராகவும், 2003இல் இங்கிலாந்திற்கு எதிராகவும் ஒரு டெஸ்டில் 10இற்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை அவர் வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நான்கு ஆண்டுக்கான தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை 50 மில்லியன் டொலருக்கு தாஜ் தொலைக்காட்சி சேவை பெற்றது

சிறிலங்கா கிரிக்கெட்சபை 2005 முதல் 2008 வரையான காலப்பகுதிக்கான போட்டிகளை ஒளிபரப்புச் செய்யும் உரிமையை சார்ஜாவிலுள்ள தாஜ் தொலைக் காட்சி சேவையிடம் 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்துள்ளது.

நேற்று முன்தினம் தாஜ் தொலைக்காட்சி சேவை அதிகாரி களுக்கும், சிறிலங்கா கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன்மாதம் இதற் கான கேள்வி அறிவித்தலை சபை விடுத்திருந்தது. டெண்டர் மூலம் 40 மில்லியன் டொலரை சபை எதிர் பார்த்திருந்தது.

எனினும் தற்போது ஒளி பரப்பு உரிமையைப் பெற்றுள்ள தாஜ் தொலைக்காட்சி சேவை கேள்விக்குரிய போட்டியை அதிகரிக்க சிறிலங்காவுக்கு வாய்ப் பளித்திருந்தது. அதன்படி அமெ ரிக்க நிறுவனம் 48 மில்லியன் டொலருக்கு கோரியது. இறுதியில் தாஜ் நிறுவனம் 50 மில்லியன் டொலருக்கு அதனைப் பெற்றது. சிறிலங்காவின் கிரிக்கெட் வர லாற்றில் இவ்வாறான விலைக்கு ஒளிபரப்பு உரிமை விற்கப்பட்டமை இதுவேமுதலாவது தடவையாகும்.

## பாகிஸ்தான்–சிறிலங்கா அணிகள் கலந்துகொள்ளும் கிரிக்கெட்தொடர் ஒக்டோபரில் பாகிஸ்தானில்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானில் சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையிலான போட்டிகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.கடந்த வருடம் ஒக்டோபரிலும் பாகிஸ் தானும் சிம்பாவேயும் இணைந்த முக்கோண ஒருநாள் போட்டிகள் நடைபெற்றன.

முன்னதாக சிறிலங்காஅணி பங்காளதேஷ் அணியுடன் ஒக்டோப ரில் போட்டியிட தீர்மானித்திருந்தது.எனினும் பங்காளதேஷ் அணி அதனை அடுத்தவருடத்திற்கு ஒத்திப்போட்டிருப்பதால் சிறிலங்கா பாகிஸ்தானுடன் விளையாட ஒப்புக்கொண்டுள்ளது.அதன்படி ஒக்டோபர் 20 ஆம் திகதி டெஸ்ட் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளது.

## ரோஜர் பெடரருக்கு அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்காவில் நடைபெற்று வரும் எ.டி.பி டென்னிஸ் போட்டி யின் முதல் சுற்றிலேயே உலகின் முதன்நிலை வீரரான ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளார். நேற்று முன்தினம் தொடங்கிய இப்போட்டித் தொடரில் உலகின் பல முன்னணி வீரர்கள் களமிறங் கியுள்ளனர். அன்றைய தினம் நடை பெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் ரோஜர் பெடரர் செக்கோஸ்செலவாக் கியாவில் கிராப்ட்டியை எதிர்த்து விளையாடினார். இதில் கிராப்ட்டி, பெடரரை திணறடிக்கும் வகையில் அபாரமாக விளையாடி 3-6,7-6,6-4 என்ற செட்களில் வெற்றிபெற்று பெடரருக்கு அதிர்ச்சி அளித்தார்.

கடந்த 24 போட்டிகளில் பெடரர் இப் போட்டியில் முதன் முதலாகத் தோல்வி அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.




## ஆசியக் கிண்ண கால்பந்து போட்டி தொடரின் இறுதிப்போட்டியில் சீனா–ஜப்பான் அணிகள்



ஜப்பான் வீரர் கிய்ஜி ரமடா

சீனாவில் நடைபெற்றுவரும் ஆசியக்கிண்ண கால்பந்து போட்டி யின் இறுதியாட்டத்தில் விளை யாட சீனா- ஜப்பான் அணிகள் தகுதிபெற்றுள்ளன.இரண்டாவது முறையாக இம்முறை சீனா இறுதிப்போட்டிக்கு நுழைந்துள்ளது.



மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி யாட்டத்தில் சீனா ஈரான் அணியை 4-3 என்ற கோல் எண்ணிக்கை யில் வெற்றி கொண்டதன் மூலம் சீனா இவ் வாய்ப்பைப் பெற் றுள்ளது. ஆரம்பத்தில் 1-1 என்ற சமநிலையில் சீனா-ஈரான் அணி கள் இருந்ததால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி திர்மானிக்கப்பட்டது.இதன் மூலம் ஈரான் வீரர்கள் இருவரின் உதைகளைச் சீன கோல் காப்பாளர் தடுத்ததன் மூலம் சீனா 4-3 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

## வீரர்களுக்கு சத்துணவு

கிளிநொச்சி மகாவித்தியாலய கடின பந்து கிரிக்கெட் அணியினருக்கு ஊட்டச் சத்து வழங்கும் வைபவம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி அரச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி சு. கனகராசா தலைமையில் நடை பெற்ற மேற்படி நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்கள் கலந்து கொண்டு மேற்படி அணியினருக்கு சத்துணவினை வழங்கிக் கௌரவித்தார்.

மேற்படி நிகழ்வில் கிளி.மாவட்ட மேலதிக அரசஅதிபர் நா. வேதநாயகன், கிளி.ம.வி. முதல்வர் வ. யோகநாதன், துணை முதல்வர் அ. பங்கயற்செல்வன், கிளி நொச்சி மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் த.ராஜா, பயிற் றுனர் அலன்டீன், பொறுப்பாசிரியர்வ.இ. சிவ லிங்கம், விளையாட்டு உத்தியோகத் தர் கலாதரன், ஆகியோர் கலந்து கொண் டனர்.ஒவ்வொரு வீரருக்கும் தலா 500 ரூபா கொண்ட சத்துணவு வழங்கப்பட்ட துடன் தொடர்ந்தும் மாதாமதம் இச்சத்துணவு வழங்கப்படுமென தெரிவிக்கப்பெற்றுள் ளது. கிளிநொச்சி அரசஅதிபரின் பெரு முயற்சியின் பயனாக மேற்படி திட்டம் முதன்முதலாக கிளிநொச்சியில் ஆரம்பிக் கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வணியில் 14 வயதிற்குட்பட்ட வீரர்கள் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப் பெறும் அஸ்ரா கிண்ணச் சுற்றுப் போட்டி யில் யாழ் மாவட்ட பாடசாலை அணிகளு டன் ஆட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (சோ, கு)

## ஹொக்கி தொடரை வென்றது இந்தியா

ஜேர்மனியில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டி யில் அயர்லாந்து அணியை வீழ்த்தி இந்தியஅணி தொடரைக் கைப்பற்றியுள்ளது.

கிரீஸ் தலைநகர் எதென்சில் இன்னும் சில தினங் களில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய ஹொக்கி அணி பயிற்சி ஆட் டங்களில் [illegible]விரமாக ஈடுபட்டுள்ளது.

இதன் [illegible] பகுதியாக ஜேர்மனியின் கொலோன் நகரில் அ[illegible]லாந்து அணிக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஹொக்கித் தொடரில் இந்திய அணி பங்கேற்றது.

இதன் முதல் போட்டியில் 2-0 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்ற இந்திய அணி, இரண்டாவது போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் அயர்லாந் திடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. இந்நிலை யில் இறுதிப்போட்டியில் அபாரமாக விளையாடிய இந்திய அணி வெற்றிபெற்றுத் தொடரைக் கைப் பற்றிக் கொண்டது.




எதென்சில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு எதென்ஸ் விமான நிலையத்தில் வரவேற்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தைப் படத்தில் காணலாம்.

## விளையாட்டு விழா

கிளிநொச்சி கனகபுரம் றோயல் முன்பள்ளிச் சிறார்களின் விளை யாட்டு விழா நாளை பி.ப. 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் சகலரையும் கலந்து பள்ளி மாண வர்களின் விளையாட்டு நிகழ் வினைக் கண்டுகளிக்கும் வண்ணம் றோயல் முன்பள்ளிப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ.கு)

## வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு வரலாற்றில் முதற்தடவையாக பெண்களுக்கான கால்பந்துப் போட்டி

வடக்கு கிழக்கு மாகாணத்தின் விளையாட்டு வரலாற்றிலேயே முதல் தடவையாக மாவட்டங் களுக்கு இடையே பெண்களுக்கான கால்பந்துப் போட்டியை நடத்தவுள்ளது.


மாகாணத்தின் எட்டு மாவட்டங்களைச் (அம் பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்) சேர்ந்த பெண் அணிகள் இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவுள்ளன.

இதேவேளை வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங் களுக்கு இடையேயான மல்யுத்தப்போட்டிகள் ஓகஸ்ட் 17ஆம் திகதி திருமலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கில் நடைபெறும் என்று மாகாண விளையாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது. மாவட்டங்களுக்கிடையேயான மெய்வல்லுநர்ப் போட்டிகள் ஓகஸ்ட் 21,22 ஆம் திகதிகளில் திரு கோணமலையில் நடைபெறும் என்று திணைக்களம் தெரிவித்தது.

இதனிடையில் கடந்தவார இறுதியில் வவுனியா மாவட்டங்களுக்கிடையில் நடைபெற்ற ஆண்களுக் கான கபடிப்போட்டியில் வவுனியா மாவட்டம் சம் பியனானது. அம்பாறை மாவட்டம் இரண்டாவதாக வந்தது. பெண்களுக்கான கபடிப் போட்டியில் வவுனியா மாவட்டம் சம்பியனாகவும் திருகோண மலை மாவட்டம் ரன்னர்ஸாகவும் வந்தது.

(25)

## சிந்தனைக்கு



நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில் நியாயப்பாடு எமது பக்கமாக இருக்கும் பொழுது, நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்கவேண்டும். இலட்சியத்தில் உறுதி பூண்டு, இறுதிவரை போராடும் மக்கள் தான் விடுதலையை வென்றெடுப்பார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 05-08-2004

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948


## முகமிழந்த சந்திரிகா!

விவசாய அமைச்சுத் தொடர்பாக ஏற்பட்ட ஒரு சர்ச்சை காரணமாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயற்குழு சனாதிபதி செயலகத்தில் கூடி ஆராய்ந்துள்ளது. அதாவது விவசாய அமைச்சின் கீழ் இருந்த பகுதி ஒன்றை ஆற்றுப்படுக்கைக்கான அமைச்சின் கீழ் கொண்டுவர சனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக ஜே.வி.பி. தெரிவித்த ஆட்சேபத்தை அடுத்தே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

ஆளும் ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டதில் இருந்தே அமைச்சுக்கள, அமைச்சுக்களுக்கான அதிகாரங்கள் தொடர்பான இழுபறி இருந்தே வருகின்றது. அமைச்சுப்பதவிகள் மீது தமக்கு அக்கறை இல்லையெனக் கூறிக்கொண்டிருந்த ஜே.வி.பி அமைச்சின் அதிகாரத்திற்காக ஏற்படுத்தும் சர்ச்சையானது இவர்களின் பேச்சொன்று செயலொன்று என்பதையே வெளிப்படுத்துபவையாக உள்ளது.

ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நாட்டின் முக்கிய பிரச்சினை எதற்கும் தீர்வு காணவில்லை என்பது மட்டுமல்ல, முக்கிய விடயங்கள் குறித்து அது விவாதிக்கவும் இல்லை என்றே கூறலாம். அரசாங்கம் அமைத்த பின்னரும் வழமைக்குச் சற்று மாறாகக் காலதாமதமாகவே பாராளுமன்றம் கூட்டப்பட்டது.

பாராளுமன்றம் கூட்டப்பட்டாலும் சபாநாயகருக்கான போட்டியில் தோற்றுப் போன ஆளும் கட்சி அதன் பின்னர் பாராளுமன்றத்தை ஒப்புக்குக் கூட்டுவதாகவுள்ளதே தவிர முக்கிய பிரச்சினைகள் எதனையும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துச் செல்லவில்லை. இதற்குப் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை நிருபிக்க முடியாத அதன் நிலையே காரணமாகும்.

அடுத்ததாக இலங்கையின் முக்கிய பிரச்சினையான சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக எந்த முடிவையும் அரசாங்கம் எடுக்கவில்லை. நோர்வே ஏற்பட்டாளர்கள் செய்த முயற்சிகள் கூடத் தோல்வியில் முடிவடைந்து விட்டதாகவே கருத வேண்டியுள்ளது. அதாவது இன்று இலங்கையிலுள்ள பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் அடிப்படையாகவுள்ள இனப்பிரச்சினை விவகாரத்தில் ஆட்சிக்கு வந்து நான்கு மாதமாகியும் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

அது மட்டுமல்ல அவ்விடயத்தில் முன்னேற்றம் காண்பதற்கான சமிக்ஞைகளும் தெரிவதாகவில்லை ஏனெனில் சனாதிபதி சந்திரிகா நேரத்திற்கு ஒன்று பேசுவது இதற்கு இடையூறாகவுள்ளது. குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதானால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து சனாதிபதி சந்திரிகாவின் கருத்துக்களைக் காட்டமுடியும்.

அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினைச் சந்தித்தபோது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்தும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தத்தயார் எனத் தெரிவித்த அவர் பின்னர் அவ்வாறு கூறவில்லை என சனாதிபதிச் செயலகம் ஊடாக மறுத்தார் பின்னர் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல் கேசனைச் சந்தித்தபோது இடைக்கால நிர்வாகசபை குறித்துப் பேசுவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது எனத் தெரிவித்த சனாதிபதி சந்திரிகா மீண்டும் தான் அவ்வாறு கூறவில்லை என நேற்றைய முன்தினத் தகவல் கூறுகின்றது. இதேவேளை இந்த தகவல் சனாதிபதியால் மறுக்கப்பட்டுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஜே.வி.பியின் அமைச்சுக்களில் இருந்து சிறுபகுதியைப் பிடுங்குவதும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் தொடர்பில் பேசுவதென இடைக்கிடை அறிவிப்பதும் ஆளும் கூட்டணிக்குள் எப்பொழுதும் பூகம்பத்தை ஏற்படுத்தும் விடயமாகவே இருந்து வருகின்றது. ஏனெனில் இவை தொடர்பாக ஆளும் கூட்டணிக்குள் எந்தவித கருத்தொற்றுமையும் கிடையாது.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து அவர் தற்போழுது ஜே.வி.பி.யின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டார். என்று கூட எண்ணவேண்டியுள்ளது அதாவது சனாதிபதி சந்திரிகா சுயமாகச் செயற்படும் நிலையிலோ கருத்துக்கூறும் நிலையிலோ இல்லை அவ்வாறு அவர் சுயமாகக் கருத்துக்கூறும் போதொல்லாம் ஜே.வி.பியின் பலத்த கண்டனத்திற்கும் விமர்சனத்திற்குள்ளாக வேண்டியது வழமையாகிவிட்டது. அத்தோடு அரசாங்கம் கவிழ்க்கப்படும் என ஜே.வி.பி எச்சரிக்கை செய்வதும் நடைமுறையாகி விட்டது.

இதன் விளைவாகத்தான் இன்று நாட்டின் முக்கிய பிரச்சினைகள் எதுவும் பற்றிப் பேச்சுக்களை நடத்த முடியாததொரு நிலையில் உள்ள சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியை சமரசம் செய்ய அடிக்கடி அதனுடன் பேச்சு நடத்த வேண்டியதாகவுள்ளது. வேறு விதமாகக் கூறுவதானால் நாட்டுப்பிரச்சினைகளை ஓரம் தள்ளிவிட்டு அதிகாரத்தை அரசாங்கத் தைத் தக்கவைக்கச் சனாதிபதி தனது கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலை நீடிப்பின் சனாதிபதி படிப்படியாகத் தனது முகத்தை இழந்தவர் ஆகிவிடுவார்.

# பட்டதாரிகள் நியமனத்தில் புறக்கணிப்பு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது

## முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம்

புதிய அரசாங்கத்தின் முதலாவது பாரிய வேலை வழங்கல் திட்டத்திற்கு அமைய வேலையற்ற பட்டதாரிகளை வேலையில் நியமித்தல் தொடர்பாக முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்குரிய நேர்முகத் தேர்வுகள் குறித்த திகதியில் உதவி அரசாங்க அதிபர்களை ஊடாக நடைபெற்றது. அனைத்து பட்டதாரிகளினதும் பட்ட சான்றிதழ், ஆவணம் முதல் அனைத்து ஆவணங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டன அதன்படி ஒரு தொகுதி வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியல் அரச ஊடகங்கள் ஊடாக வெளியிடப்பட்டது. அவற்றில் எமது மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் பெயர்கள் இடம் பெறாமையையிட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம் என முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும், நாம் பல்வேறு பொருளாதார போர் நெருக்கடியின் மத்தியிலும் தளராது கல்வியை தொடர்ந்து, கல்வி மூலமே எமது வாழ்வு என்ற நிலையில் பட்டம் பெற்று இன்றுவரை வேலைக்காகக் காத்துக் கிடக்கின்றோம். இன்றைய அரசு எங்களுடைய மாவட்டப் பட்டதாரிகளுக்கான வேலையை வழங்கவில்லை. கண்ணை மூடியுள்ளது. தமக்கு சாதகமான பகுதிகளை முன்னிலைப்படுத்தி எமது வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்குள்ளேயே ஒரு சில மாவட்டங்களுக்கு நியமனத்தை வழங்கியுள்ளது.

இதன் மூலம் தமிழ் சந்ததியினராகிய நாம் ஒற்றுமை இழந்து வாழ்வை சீரழிக்கவும், எமக்குள் பகைமையை வளர்க்கவும் அரசின் ஒரு நடவடிக்கையாகவே இதனைக் கருதுவதோடு, அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் நாம் வாழ்வதால் எமக்கு அரசு தந்த தண்டனையாகவே நாம் இதனை கருதுகின்றோம்.

மேலும் இன்றைய இந்த அரசின் வேலை வழங்கலினால் எம் மாவட்ட பட்டதாரிகள், புத்திஜீவிகள், மக்கள் அனைவரும் பெரு விரக்தி அடைந்துள்ளதோடு அரசாங்கத்தில் நம்பிக்கையும் இழந்துள்ளனர். எனவே நாம் இவ்வாறு தொடர்ச்சியாக கடந்த காலங்களில் பொருளாதாரத்தடை, போரின் நெருக்கடி போன்றவற்றாலும் இன்று கல்வியைக் கற்றும் அதற்கான அனுபவிக்க முடியாத இன்றைய அரசின் செயற்பாட்டினால் எமக்குள்ளேயே நாம் இலங்கையர் என்ற முழு நாட்டில் இருந்து பிரிந்தவர்களாகவே உணர்கின்றோம். தொடர்ச்சியாக இதற்கான சாதகமான நிலை தோன்றாவிடில் வேறு வழியின்றி எமக்காக, எமது உரிமைக்காக எம்மை நேசிப்பவர்களின் கரங்கள் எதுவோ அவர்களின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலம் எமது உரிமையான வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஒட்டுமொத்தமாக புதிய அரசாங்கத்தை நாம் மீண்டும் மீண்டும் பணிவன்புடன் கேட்டுக் கொள்வது எமது மாவட்டமும் எந்தவித வேறுபாடுகளுமின்றி உடனடியாக வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள ஆவன செய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதி, நிதியமைச்சருக்கும் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது(20)

# பட்டதாரிகளுக்கு வேலை வழங்கியதை அமைச்சர் கேக் வெட்டிக் கொண்டாடினார்

முப்பதினாயிரம் வேலையற்ற பட்டதாரிகளிற்கு வேலை வழங்கும் திட்டத்தில் முதற் கட்டம் வெற்றிகரமாக நிறைவுற்றதை நிதியமைச்சர் டாக்டர் சரத் அமுனுகம கடந்த வெள்ளியன்று கொண்டாடினார்.

அமைச்சர் இதனைத் தனது இத்திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சகப் பணியாளருடன் கடந்த வெள்ளியன்று கேக் வெட்டிக் கொண்டாடியதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நியமனம் தொடர்பாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே.

# புலிகளுடன் பேச்சுவார்த்தை குறித்த அரசின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### –அரசாங்கம் அறிவிப்பு

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக இதுவரை பின்பற்றப்பட்டு வந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக நேற்று முன்தினமும் நேற்றும் சில ஊடகங்கள் ஊடாக வெளியான செய்திகள் அரசின் கவனத்தை ஈர்த்துள்ளதாக அரசின் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சனாதிபதி மாளிகையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்தப்போவதாகக் கூறவில்லையென சனாதிபதி கூறியதாக வெளியான செய்திகள் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளதென அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. இதேவேளை அன்று இடம்பெற்ற கூட்டத்தில் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பில் அரசின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லையெனக் கூறப்பட்டதென அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# இ.நி.சபை தொடர்பில் பேச்சு நடத்த மக்கள் ஆணை வழங்கவில்லை

### –ஹெல உறுமய செயலாளர் சம்பிக்கரணவக்க

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்கு அமைய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கோ ஐக்கிய தேசியக் கட்சிக்கோ மக்கள் ஆணையை வழங்கவில்லை என ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபைக்குப் பின்னர் 'இலங்கையின் சமாதானம்' என்ற தலைப்பில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பு இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. இடைக்கால நிர்வாக சபை ஊடாகப் புலிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் தனியான அரசாங்கம் ஒன்று வழங்கப்படும். குறிப்பாக விடுதலைப்புலிகளின் இராணுவம் நீதிமன்றம் ஆகியவை சட்ட ரீதியாக மாற்றப்படும். அதே போன்று நிர்வாகம் காணி அதிகாரம் உட்பட பல அதிகாரங்கள் இடைக்கால நிர்வாக சபை ஊடாகப் புலிகளுக்கு வழங்கப்படும். எனவே உயிர்களைத் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு சாட்சியாக நாட்டின் நிர்வாகத்தை ஜாதிக ஹெல உறுமய எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க வேண்டியது முக்கிய பொறுப்பு என்று சம்பிக்கரணவக்க குறிப்பிட்டார். அவ்வாறு செய்யாவிடின் எதிர் காலச் சந்ததியினருக்கு நாட்டின் ஒருபகுதி எஞ்சாது என்றும் தெரிவித்துள்ளார்.

# டக்ளஸ் தேவானந்தாவுக்கு குண்டு துளைக்காத கார்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு குண்டு துளைக்காத கார் ஒன்றை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வழங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து அண்மையில் தற்கொலைத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படவிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்தே, அவரின் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் அவருக்கு இந்தக் கார் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதுவரையில் சனாதிபதி தவிர்ந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் ஏழுபேருக்கு மட்டுமே இத்தகைய குண்டு துளைக்காத வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுள் ஒருவராக இனிமேல் டக்ளஸ் தேவானந்தாவும் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறும் சனாதிபதி உத்தரவிட்டிருப்பதாகவும், இதன் பிரகாரம் அவர் பயணம் செய்யும் வாகனத்துக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பட்டதாரி நியமனம் வழங்குவதில்
# திருமலை பட்டதாரிகளுக்கு பாரபட்சம்
## பாதிக்கப்பட்டோர் பி.செ.மகஜர் சமர்ப்பிப்பு

(திருகோணமலை)

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் திருகோணமலை மாவட்டப் பட்டதாரிகளுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டிருப்பதாக நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் குழு ஒன்று நேற்றுப் புதன்கிழமை காலை திருகோணமலை பிரதேச செயலாளர் சுந்தரம் அருமைநாயகத்திடம் முறையிட்டது. பாதிக்கப்பட்ட திருமலை பட்டதாரிகள் சார்பில் ரி.ராஜேஸ்வரன் பிரதேச செயலாளரிடம் மகஜரைச் சமர்ப்பித்தார்.

"அரச துறையில் பணியாற்றி வரும் பட்டதாரிகளின் பெயர்களும் நியமனம் பெறுவோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளன. 1999, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் நியமனம் வழங்குவதில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்; இப்பட்டதாரிகளின் பெயர்கள் நியமனம் பெறுவதற்கான பட்டியலில் இடம்பெறவில்லை. தற்போது இடம்பெற்ற பட்டதாரி நியமனங்கள் மீள் பரிசீலனை செய்யப்படவேண்டும். ஆண்டு வாரியாக நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்" என்று வேலையற்ற பட்டதாரிகள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகஜரின் பிரதிகள் நிதி அமைச்சர் டாக்டர் சரத்அமுனுகம, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (25)

### கரடிப் போக்கு சந்திப் பகுதியில்
# வீதியில் சிந்தியிருந்த ஒயிலில் சறுக்கி உந்துருளிகள் வீழ்ந்தன

(அலுவலக செய்தியாளர்)

வாகனம் ஒன்றிலிருந்து வீதியில் சிந்திய ஒயிலில் பல உந்துருளிகள் சறுக்கி வீழ்ந்தன.

இச்சம்பவமானது நேற்றுக் காலைவேளை இடம்பெற்றுள்ளது. ஏ-9 பிரதான வீதியில் கரடிப் போக்குச் சந்திக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட பகுதியில் வாகன ஒயில் வீதியில் அதிகமாக சிந்தியதனால் அதனைக் கவனிக்காது பயணித்த பல உந்துருளிகள் திடீரெனச் சறுக்கி விழுந்துள்ளன. இதனால் உந்துருளிகள் பாதிப்புக்கு உள்ளானதுடன் அதில் பயணித்தவர்களும் சிறிய காயங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

அதனைக் கவனத்தில் எடுத்த தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் உடனடியாகப் பாதுகாப்பான முறையிலான போக்குவரத்தினை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (கு)

## திடீர் சுழற்காற்று

தென்மராட்சி, தச்சன்தோப்பு, நாவற்குழிப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு எட்டு மணியில் இருந்து எட்டரை மணிவரை திடீர் என சுழற்காற்று வீசியதால் இப்பகுதி கோவில்களின் கூரைத் தகடுகள் மற்றும் வீடுகளின் ஓடுகள் பறந்தன. தென்னை, பனை மரங்கள் முறிந்து விழுந்தன. வீட்டின் கூரை ஓடுகள் காற்றின் வேகத்தில் கழன்று கொட்டியதால் இப்பகுதியே இரவு அல்லோலகல்லோலப்பட்டது. (28)

## சிறப்புத்தமிழிசை அரங்கு

(கிளிநொச்சி)

சங்கீத கலா ஜோதி திருமதி ஜெகதா பத்மகாந்தன் அவர்களின் "சிறப்புத்தமிழிசை அரங்கு" நாளை மாலை 4.30 மணிக்கு கிளி. பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கீத கலா ஜோதி திருமதி ஜெகதா பத்மகாந்தன் ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்து சென்று தற்போது தாயகத்திற்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

### சக அதிகாரிகள் முன் அவமானப்படுத்தினார்
# யாழ். பொலிஸ் உயரதிகாரி மீது உப பொலிஸ் பரிசோதகர் முறைப்பாடு

(வடமராட்சி)

சக பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் தன்னை அவதூறாக ஏசியதுடன் தன்னை தாக்கவும், முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டி பொலிஸ் உயரதிகாரி ஒருவர் மீது மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ். அலுவலகத்தின் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இம் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில் யாழ். மாவட்ட தலைமையலுவலகப் பொறுப்பதிகாரியான ஆனந்த செனவிரட்ணபொலிஸ் அதிகாரிகளது கூட்டமொன்றிற்காக குடாநாட்டிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலைய அதிகாரிகளையும் தனது அலுவலகத்திற்கு அழைத்துள்ளார்.

அக்கூட்டத்திற்கென வந்திருந்த வேளையிலேயே குறித்த பொலிஸ் அதிகாரியை தாக்கமுற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், பொதுமகன் ஒருவரை அண்மையில் பொலிஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்தமை தொடர்பான முறைப்பாடொன்றும் குறித்த உயரதிகாரிக்கு எதிராக தமக்குக் கிடைத்துள்ளதெனவும் தெரிவித்தனர். (27)

# பொன்னம்பலம் மருத்துவமனையில் கட்ராக்ற் சத்திர சிகிச்சை

(கிளிநொச்சி)

இங்கிலாந்தில் இருந்து வருகை தரவுள்ள கண்சத்திர சிகிச்சை நிபுணர்களினால் புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சியில் இயங்கும் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைகளில் கட்ராக்கிற்குரிய சத்திரசிகிச்சைகள் வரும் 18,19, 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மேற்படி கட்ராக்ற் சத்திர சிகிச்சை பெறவிரும்புவோர் பின்வரும் நாட்களில் இம்மருத்துவமனைகளுக்கு சமுகமளித்து தமக்கான சத்திரசிகிச்சைகளை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வரும் 9, 11, 16ஆம் திகதிகளில் காலை 8.30 மணிதொடக்கம் பிற்பகல் இரண்டு மணிவரையும் பதிவுகளை மேற்கொள்ளலாமெனவும், புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை இன்று தொடக்கம் வரும் 16ஆம் திகதி வரையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணி வரையும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். இதேவேளை தங்கள் பிரதேசத்தில் உள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவமனையிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.ம.சு...

போய்விட்டதாக கவலை கொண்டமை, இதனால் கட்சித்தலைமைப் பதவியைத் துறப்பதன் மூலம் பிரச்சினைகள் கைமீறிப்போகும் போது மட்டும் அதில் தலையிட்டுத் தீர்த்துவைக்கமுடியும் என எண்ணியமை சிறிலங்காவில் இடைக்கால சனாதிபதி ஆட்சியை அறிவித்து, பாராளுமன்றத்தை இடைநிறுத்துவது போன்ற சில இரகசிய அரசியற் காய் நகர்த்துவதற்காக, சந்திரிகா இந்தப் பதவி விலகலைப் பயன்படுத்தவுள்ளதாகக் கருதப்படுகின்றது.

இதற்கிடையில், இந்தப் பதவி விலகலின் மூலம், சனாதிபதி கதிரையில் தனக்கு விசுவாசமுள்ள வேறு ஒரு நபரை உட்கார வைத்து, தான் பிரதமராகும் திட்டமும், அதன் மூலம் பாராளுமன்றத்தை தன் தலைமையில் நடாத்தி, சனாதிபதி முறையை இல்லாமற் செய்து விடுவது சந்திரிகாவின் தற்போதைய அவசர இரகசியத் திட்டமாக அமைகிறது என்றும் சர்வதேச அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தான் பிரதமராக வருவதன் மூலம், அடுத்த வருடம் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, சனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் சில தில்லுமுல்லுக்களை சந்திரிகா வருகிற சில வாரங்களில் உருவாக்குவார் என்றும் அந்த ஆய்வாளர் ஆருடம் கூறியுள்ளார்.

### முல்லை...

வைப் பூட்டி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் செயலகப் பணிகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தது. முல்லைத்தீவு மாவட் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும் எனவும் இதற்கான உத்தரவாதத்தினை உடன் அறிவித்தல் வேண்டும். ஆகிய கோரிக்கையை முன்வைத்தே மேற்படி போராட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் ஈடுபட்டனர். இதற்கு அரசு சாதகமான பதிலை தரத்தவறும் பட்சத்தில் தொடர் போராட்டங்களை மேற்கொள்ள வுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (20,08)

### சந்திப்புக்களை...

பாலசிங்கத்திற்கும், விதார் ஹெலகேசனுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே, விதார் ஹெலகேசன் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் இவ்வாறு குறிப்பிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளையும், சிறிலங்கா அரசாங்கத்தையும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காததையடுத்தே தாம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டிருப்பதாக விதார் ஹெலகேசன் தெரிவித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உசன்...

அவர்கள் வருகைக்காகவே திகதி மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். திட்டமிட்டபடி சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்றில் போராட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். (28)

### கிரவல்...

திலேயே பலியானார்.

பாரதிபுரத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான ப.இரத்தினசாமி (வயது 56) என்பவரே மேற்படி சம்பவத்தில் பலியானவராவார். ஸ்தல விசாரணையினை மேற்கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் சாதனா அவர்கள் சம்பவ இடங்களைப் பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைக்கு உத்தரவிட்டார். தமிழீழ காவல்துறை வீதிப் போக்கு வரத்துப்பிரிவினர் வாகனச் சாரதியினை தடுத்து வைத்து விசாரணையினை மேற்கொண்டு வருவதுடன் பாரவூர்தியினை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். (சோ)

### புதுக்குடியிருப்பில்...

தொடர்ந்து தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பிரமாண்டமான உருவப்படத்தைத் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்தி தொடர்ந்து வர அதற்கு அடுத்ததாக சிறப்பு விருந்தினர் கௌரவவிருந்தினர் மற்றும் கல்வித்துறை சார்ந்த முக்கிய உத்தியோகத்தர்கள் தொடர்ந்துவர அதனை அடுத்து சிலம்பு கூறல் நிகழ்வு ஊர்தியும், அதைத் தொடர்ந்து பண்டாரவன்னியனின் வீரப்படையெடுப்பு ஊர்தியும், அடுத்து மனுநீதிகண்ட சோழனின் தேர்காட்சி ஊர்தியும், அடுத்து ஆனையை அடக்கிய அரியாத்தை மரபுக் கூர்த்து ஊர்தியும், இலக்கியப் புலவர்கள் பாரிமன்னன் முல்லை கொடிக்கு தேர் ஈர்ந்த காட்சி போன்ற ஊர்தியும் உள்ளடக்கி மெல்ல மெல்லப் பவனி தொடர்ந்தது.

அவ் ஊர்திகளுக்கு இடையிடையே மாணவர்களது கும்மி கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், மற்றும் பெரியோர்களது பானை நடனம் என்பன சிறப்பான முறையில் [illegible]ம்பெற்று வர பிரதான வீதி[illegible]யாகப் புதுக்குடியிருப்பு சிற[illegible]பிரமணிய வித்தியாசாலையை வந்தடைந்தனர். அங்கு பொது ஈகச்சுடரினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை முல்லைமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் நடைபெற்றது.

தலைமையுரையினை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா நிகழ்த்தினார் இந்தத்தமிழ்விழாவை ஒட்டி பொதிகை எனும் மலர் வெளியீடு இடம்பெற்றது தொடர்ந்து. கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் க. சரவணபவன் அவர்களின் உரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்களது உரையும், அனைத்துலக தமிழ் தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர் நகுலன் அவர்களது உரையும் இடம் பெற்றது.

தொடர்ந்து முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் முல்லைமாவட்டக் கல்விப் பணிப்பாளர் வே.சுப்பிரமணியம் அவர்களது உரை இடம்பெற்றது தொடர்ந்து தமிழ்தினப் போட்டியில் முதல் இடத்தை பெற்ற மாணவ மாணவிகளது கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழும் தேசியமட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (08,20,கு)


## இலங்கை வங்கி

இலங்கைவங்கி தனது 65 ஆவது வருடப் பூர்த்தியினை முன்னிட்டு நிலையான வைப்புகளுக்கு 1% அதிகரித்த வட்டியினை வழங்குகின்றது. (7+1=8%) என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இவ் அதிகரிப்பு 31. 08. 2004 வரை செல்லுபடியாகும்.

தகவல்:
உதவிப் பொதுமுகாமையாளர்,
(வடபிராந்தியம்)
யாழ்ப்பாணம்.

(சி-9772)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 05 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.